# இந்தியாவில் அக்குபங்சர்

## மாற்று மருத்துவங்களின் சட்ட அங்கீகாரம் குறித்த கட்டுரைகள்

Healer. **அ.உமர் பாரூக்,** M.Acu, D.Ed (Acu),

பாரதி புத்தகாலயம்

RangaRakes tamilnavarasam.com

# 1
# சட்ட அறிவின் தேவை



“ஒவ்வொரு நாட்டின் தேசிய சுகாதார, மக்கள் நல்வாழ்வுத்திட்டங்களிலும் அந்தந்த நாடுகளின் மரபுவழி மாற்று மருத்துவங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் இவ்வகை மருத்துவங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் அவை குறித்த அறிவையும், முறைப்படுத்தும் வழிமுறைகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். மரபுவழி மருத்துவங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க இதுவே சிறந்த வழி” என்று வலியுறுத்துகிறார் உலக சுகாதார நிறுவனத்தின் மாற்று மருத்துவப்பிரிவின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.ஷியாருய் ஜாங்.

உலகில் ஆரோக்கியத்தை மீட்கும் பணியில் அறிவியல் பூர்வமான அனைத்து மருத்துவங்களின் பங்களிப்பும் அவசியம் என்பதை சமீப காலங்களில் உலக அரசாங்கங்கள் உணர்ந்து வருகின்றன. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மருத்துவங்களில் ரசாயனக் கலப்பற்ற,

RangaRakes tamilnavarasam.com

இயற்கை வாழ்வியல் சார்ந்த பல முறைகள் உலக மக்களால் பெரும் வரவேற்புக்கு உள்ளாயின. தங்களுடைய மரபுவழி மருத்துவங்களை இன்றைய ஆங்கில மருத்துவத்திற்கு எதிரான மாற்று மருத்துவங்களாக மக்கள் உணரத்துவங்கி வருகின்றனர்.

2003 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் கணக்கின் படி இந்தியாவில் 70% மக்கள் மரபுவழி மருத்துவங்களை விரும்புவோராக இருக்கின்றனர். இந்தியா போன்ற மரபுசார்ந்த நாடுகளின் அரசுகள் எந்த விதமான திட்டங்கள் மூலம் இவ்வகை மருத்துவங்களை அங்கீகரிக்கலாம் என்ற வழிகாட்டுதல்களை உலக சுகாதார நிறுவனத்தின் மாற்று மருத்துவப் பிரிவு வழங்கிவருகிறது. அவற்றைப் பின்பற்றி உலகின் பல நாடுகள் மரபு வழி மாற்று மருத்துவங்களை முறைப்படுத்தி, சட்ட ரீதியான அங்கீகாரங்களை வழங்கி, பயன்படுத்தி வருகின்றன.

மாற்று மருத்துவங்களின் உலக அங்கீகார வரலாற்றையும், நம் நாட்டில் அது எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் ஒவ்வொரு மாற்று மருத்துவரும், மாற்று மருத்துவங்களில் அக்கறை கொண்டோரும் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

உலகம் முழுவதும் பணத்திற்காக எதையும், எப்படியும் விற்கத்துடிக்கிற வணிக சூதாடிகள் நிரம்பி வழியும் இந்த நூற்றாண்டில் எந்த ஒரு விஷயத்தையும் அதன் அடிப்படையிலிருந்து புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு மருத்துவத்தைப் பற்றி அதன் சட்ட, அங்கீகார அம்சங்களோடு புரிந்து கொள்வதுதான் அதை பின்பற்றவும், குழப்பங்களைத் தவிர்க்கவும் அவசியமாக உள்ளன.

உலகம் முழுவதும் தன் ஆதிக்கத்தைப் பரப்பி வரும் பகாசுர நிறுவனங்கள் ஆங்கில மருத்துவத்தை அதன் விற்பனைச் சந்தையாக மாற்றி வருவது போன்றே, மாற்று மருத்துவங்களையும் அதன் லாபம் கருதி சந்தைப்பொருளாக மாற்ற முயல்கிறது. உதாரணமாக, ஆங்கில மருத்துவத்திற்கு மாற்றாக உலகம் முழுவதும் வளர்ந்து வரும் அக்குபங்சர் மருத்துவத்தை அமெரிக்காவும், அதன் மருந்துக்கம்பெனிகளும் துவக்கத்தில் எதிர்த்து வந்தன. அக்குபங்சர் ஊசிகள் சுகாதாரக் குறைவினால் தொற்று நோய்களைப் பரப்பும் என்று மக்களை அச்சுறுத்தினர் கம்பெனி விஞ்ஞானிகள். அதையும் மீறி ஆசிய மருத்துவ முறைகளின் மேல் அமெரிக்க மக்களின் ஈர்ப்பு கண்டு, தற்போது இருபத்தேழு அக்குபங்சர் மருத்துவக் கல்லூரிகளைத் திறந்திருக்கிறது அமெரிக்கா.

தமிழகத்தில் பல கிளைகளைக் கொண்ட ஆங்கில மருத்துவத்திற்கு பேர் போன ஒரு கிரேக்கப் பெயர் தாங்கிய நிறுவனம் அக்குபங்சர் அறிவியல் பூர்வமான மருத்துவம் இல்லை என்று கூறி வந்தது. 2010 அக்டோபர் மாதத்தில் அந்த நிறுவனத்தில் பணி புரியும் ஆங்கில

RangaRakes tamilnavarasam.com

மருத்துவர்களுக்கு சிறப்பு அக்குபங்சர் பயிற்சி அளிக்கும் ஒரு மையத்தை அதே ஆங்கில மருத்துவ நிறுவனம் துவங்கியுள்ளது. இப்படி, எந்தத்துறை வெற்றிகரமான வருமானம் உள்ளதாக மாறுகிறதோ, மக்கள் வரவேற்புள்ளதாக உள்ளதோ அதில் எந்த வித தயக்கமும் இன்றி நுழைகின்றன வணிக நிறுவனங்கள்.

இவ்வாறு மாற்று மருத்துவங்களில் பல புதிய நிறுவனங்கள் மூக்கை நுழைத்திருக்கின்றன. எந்தத் துறையிலும் யார் வேண்டுமானாலும் தங்கள் வருகையை நிகழ்த்தலாம் என்பதில் யாருக்கும் இரண்டாம் கருத்து இருக்க முடியாது. என்றாலும், மாற்று மருத்துவங்களில் போலி விளம்பரங்களோடு, மாற்று மருத்துவர்களின் அச்சத்தை தூண்டி, அதிகரித்து அதனை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இத்தகைய நிறுவனங்கள் தங்கள் கடையை விரிக்கின்றனர்.

ஒரு அடிப்படைத் தெளிவற்ற விஷயத்தில் தான் அதிகபட்ச வியாபாரத் தந்திரங்கள் பிறக்க வழி இருக்கிறது. என்னதான் பெரிய நிறுவனங்கள் தங்கள் விற்பனைகளை மாற்று மருத்துவர்களிடம் நிகழ்த்தினாலும், அதில் சிக்கிக் கொள்கிற நபர்களின் அடிப்படைக் குழப்பமும் ஏமாற்றத்தின் முக்கியமான காரணியாக மாறுகிறது.

இக்காலத்தில், மாற்று மருத்துவர்களின் சட்ட ரீதியான அறிவுக் குறைபாடு புதிய பல வியாபாரங்களை உருவாக்கி வருகிறது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவம் எது என்பதில் துவங்கி, முறையான அங்கீகாரம் பெற்ற மருத்துவக் கல்வி எது என்பது வரை பல வகையான குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்த வரை மாற்று மருத்துவங்களின் அங்கீகாரம் என்பது தாமதமான செயலாக இருந்தாலும் கூட தெளிவான வரையறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றை வருகிற பக்கங்களில் சுருக்கமாக, ஆவணங்களோடு தெரிந்து கொள்வோம்.

# 2

# உலக மருத்துவங்களின் அங்கீகாரம்

உலகம் முழுவதும் உள்ள எல்லா நாடுகளிலும் ஒவ்வொரு விதமான மருத்துவமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. அம்மருத்துவ முறைகள் அந்தந்த நாட்டு பழக்க வழக்கங்கள், பருவகாலங்கள், சுற்றுச்சூழலிற்கேற்றபடி விதம் விதமாக அமைந்திருந்தன. மூலிகைகளைப் பயன்படுத்தும் மருத்துவ முறைகள், இயற்கை வாழ்வியல் சார்ந்த பயிற்சி முறைகள், அழுத்துதல் ,தொடுதல் , குத்துதல் போன்றவற்றாலான முறைகள் . . என ஒவ்வொரு நாட்டிலும் அதன் தன்மைக்கேற்ப மருத்துவங்கள் மக்களிடம் அவர்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவைகளாக இருந்தன. இவைகள் தான் மரபுவழி மருத்துவங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பிற்காலத்தில் நவீன மருத்துவ முறையாக அறியப்பட்ட ஆங்கில மருத்துவ முறை நடைமுறையில் இருந்த பிற மருத்துவ முறைகளில் இருந்து தோன்றியது. முறைப்படுத்தப் படாத கருத்துக்களோடு, அடிப்படைத் தத்துவங்கள் ஏதுமில்லாத நிலையில் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில மருத்துவம் உலகம் எங்கும் பரவியது. விஞ் ஞானக் கண்டுபிடிப்புகளும், மாறி வந்த நாகரீகங்களும் மேற்கத்திய நாடுகளில் இம்மருத்துவத்தை வேகமாக வளர்த்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில மருத்துவர் சாமுவேல் ஹானிமனால் ஆங்கில மருத்துவத்திற்கு நேரெதிரான ஹோமியோபதி கண்டுபிடிக்கப் பட்டது. இக்காலத்திலேயே ஆங்கில மருத்துவத்தில் ரசாயனப்

பயன்பாடு அதிகமான அளவில் இருந்தது. ரசாயன மருந்துகளை விரும்பாத ஆங்கில மருத்துவர்கள் இயற்கையான வாழ்வியலை நோக்கித் திரும்பி, இயற்கை மருத்துவத்தை பின்பற்றத் துவங்கினர். ஹோமியோபதியின் தோற்றத்திற்குப் பின்னால் உலகம் முழுவதும் ஆங்கில மருத்துவத்திற்கு மாற்றான உலகளாவிய முறைகளாக ஹோமியோபதியும், இயற்கை மருத்துவமும் பரவின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்பட்ட கிருமிக்கொள்கை ஆங்கில மருத்துவத்தின் போக்கை திசை மாற்றியது. ஹோமியோவையும், இயற்கை மருத்துவத்தையும் பின்னுக்குத்தள்ளி வெகு வேகமாக ஆங்கில மருத்துவம் புதிய தத்துவங்களால் தன்னைத் தகவமைத்துக்கொண்டது. பல்வேறு நாடுகளில் இருந்த தனித்தனி மரபுவழி மருத்துவமுறைகள் ஆங்கில மருத்துவத்தின் வருகையால் படிப்படியாக ஓரம் கட்டப்பட்டன.

இந்தியாவில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா போன்ற மரபுவழி மருத்துவங்கள் ஆங்கில மருத்துவத்தின் வருகையாலும், தங்கள் ரகசியம் காக்கும் வர்ணாசிரமப் போக்குகளினாலும் மறையத்துவங்கின.

இருபதாம் நூற்றாண்டில் ஆங்கில மருத்துவத்திற்கு எதிரான கருத்தாக்கங்கள் மறுபடியும் வலுப்பெற்றன. நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள், ரசாயன மருந்துகள் மற்றும் அதன் பக்க விளைவுகள் போன்றவற்றால் உலகம் முழுவதும் மரபுவழி மாற்று மருத்துவங்களின் தேவையும், இயற்கை சார்ந்த வாழ்வியல் முறைகளுக்கான மக்களின் தேடலும் அதிகரித்தன. உலகம் முழுவதும் உள்ள மரபு வழி, மாற்று மருத்துவங்களின் பட்டியலை உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) தேடத்துவங்கியது. 1960 களில் நூறு விதமான மாற்று மருத்துவ முறைகள் உலகமெங்கும் பின்பற்றப்பட்டு வந்ததை W.H.O கண்டுகொண்டது.

1962 ஆம் ஆண்டு செப்டம்பரில் உலக சுகாதார நிறுவனத்தின் உலக சுகாதாரத்திற்கான கருத்தரங்கம் சோவியத் ரஷ்யாவில் அல்மா அட்டாவில் கஜகஸ்தான் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் 104 மாற்று மருத்துவங்களை W.H.O அங்கீகரித்தது. மாற்று மருத்துவங்களுக்கான உலகத்தேவையை உணர்ந்த கருத்தரங்கமாக இது நடைபெற்றது. தொடர்ந்து இம்மருத்துவங்களை முழுவதுமாகப் புரிந்து கொள்வதும், பயிற்சியளிப்பதும் எதிர்கால வேலைத்திட்டங்களாக முடிவு செய்யப்பட்டன.

W.H.O வின் உலகளாவிய அங்கீகாரத்திற்குப் பிறகு அந்தந்த நாடுகளின் மருத்துவங்கள் மறுபடியும் தூசு தட்டப்பட்டன. அக்குபங்சர் மருத்துவம் உலகம் முழுக்க பரப்பப்பட வேண்டியதன் பொருட்டு அதன் குறியீடுகளை எண்களாக பொதுத்தன்மைக்கு

கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1965 ஆம் ஆண்டில் ஜப்பானில் அக்குபங்சர் புள்ளிகளின் பெயர்களை சீரமைக்கும் பணியை "ஜப்பான் மெரிடியன் அண்ட் பாய்ண்ட்ஸ் கமிட்டி" துவக்கியது. தொடர்ந்து சீனாவிலும் இம்முயற்சியை "ஆல் சீனா அக்குபங்சர் மாக்ஸா சொசைட்டி" மேற்கொண்டது.

தெற்காசியாவில் இலங்கையில் இருந்து ஆங்கில மருத்துவர்.ஆண்டன் ஜெயசூரியா அந்நாட்டு அரசின் நிதி உதவியுடன் 1974 இல் சீனாவிற்குச் சென்று அக்குபங்சர் மருத்துவம் பயின்றார். தொடர்ந்து 1975 ஆம் ஆண்டில் இலங்கை அரசு மருத்துவமனையின் ஒரு பிரிவில் அக்குபங்சர் மருத்துவத்தையும் பயன்படுத்தி சிகிச்சையளித்து வந்தார். பிற நாடுகளில் இருந்து வரும் மருத்துவர்களுக்கு அரசு மருத்துவமனையில் சிறப்பு பயிற்சி வழங்க அவருக்கு இலங்கை அரசு அனுமதியளித்தது.

1977 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் மாற்றுமருத்துவம் குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் தங்கள் தேசிய மக்கள் நல்வாழ்விற்காக மரபு வழி மாற்று மருத்துவங்களைப் பயன்படுத்திக் கொள்ள திட்டமிடவேண்டும்" என்று அத்தீர்மானம் கூறியது. 104 மாற்று மருத்துவங்களைப் பற்றிய குறிப்புக்கள் வெளியிடப்பட்டன.

தொடர்ந்து 1978 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம், யுனிசெஃப் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு இணைந்து 134 அரசுகளின் பிரதிநிதிகள், 67 உலக அமைப்புக்கள் என அனைவரும் கலந்து கொண்ட கருத்தரங்கை நடத்தியது. "கி.பி.இரண்டாயிரத்திற்குள் அனைவருக்கும் ஆரோக்கியம்"என்ற இலக்கோடு 1962 இல் துவங்கிய மாற்று மருத்துவங்களுக்கான ஒப்பந்தம் செயலுக்கு வந்தது. 1978 செப்டம்பர் 12 ஆம் தேதியன்று இந்திய அரசு இத்திட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டது.

### அக்குபங்சரும், உலக நிறுவனமும்

உலக சுகாதார நிறுவனம் 1982 ஆம் ஆண்டு டிசம்பரில் "அக்குபங்சர் புள்ளிகளை பொதுமைப்படுத்துதல்" என்ற தலைப்பில் மணிலாவில் கூடியது. சீனா, ஜப்பான், கொரியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் ஆலோசனைகளோடு அக்குபங்சரின் 361 புள்ளிகள் மற்றும் 14 சக்தி ஓட்டப் பாதைகள் வரையறுக்கப்பட்டன.

அக்குபங்சர் புள்ளிகளுக்கான எண்கள் மற்றும் சக்தி ஓட்டப்பாதை களின் குறியீடுகள் ஆகியவற்றை விளக்கும் "Standard Acupuncture Nomenclature" என்ற நூல் உலக சுகாதார நிறுவனத்தின் சார்பாக டாக்டர். வாங் தேஷன் அவர்களால் 1984 இல் வெளியிடப்பட்டது. பின்பு, 1984 மே மாதத்தில் டோக்கியோவிலும், 1985 ஜூலையில்

RangaRakes tamilnavarasam.com




ஹாங்காங்கிலும், 1987 ஜூனில் சியோலிலும் இதே தலைப்பில் ஆய்வுகள் செய்யப்பட்டன.

1989 ஆம் ஆண்டில் அக்டோபர், நவம்பரில் ஜெனீவாவில் அக்குபங்சர் சக்தி ஓட்டப்பாதைகளின் குறியீடுகள் மறுபடியும் திருத்தப்பட்டன.

இவ்வாறு உலக மாற்று மருத்துவ அங்கீகாரங்களின் படி, பல மரபு வழி மாற்று மருத்துவங்கள் புத்தெழுச்சி பெற்றன. 1970 களில் இந்தியாவில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி முறைகள் அங்கீகரிக்கப்பட்டன.

அக்குபங்சர் மருத்துவத்தில் நாம் பயன்படுத்தும் குறியீடுகள் அனைத்தும் 1984 ஆம் ஆண்டு வெளியீட்டின் அடிப்படையிலானவை. திருத்தப்பட்ட குறியீடுகள் இன்னும் நம் நாட்டில் முழுமையாக பயன்பாட்டில் இல்லை.

மாற்று மருத்துவங்கள் இந்தியாவில் எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டன என்பதைப் பார்ப்போம்.

# 3

# இந்திய மருத்துவக் கழகங்கள்

இந்தியாவின் பாரம்பரிய மருத்துவமுறைகளான சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவங்களுக்கு முன்பாகவே ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கில மருத்துவம் முழுமையான மருத்துவமுறையாக நம் நாட்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆங்கில மருத்துவத்திற்கான சட்டங்களை Indian Medical Council Act 1956, ஆங்கில மருத்துவக் கல்வி முறையை வரையறுக்க Indian Medical Degrees Act 1916 மற்றும் 1940, 1948, 1959 சட்டங்களும் நடைமுறையில் உள்ளன.

நம் நாட்டின் மரபு வழி மருத்துவங்கள் சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்றவைகளை முழுமையான மருத்துவ முறைகளாக அங்கீகரித்து, அவற்றை ஒழுங்குபடுத்த Indian Medicine Central Act 1970 இயற்றப்பட்டது.

1839 ஆம் ஆண்டில் லாகூர் மஹாராஜா ரஞ்சித் சிங்கின் சிகிச்சைக்காக ரோமானிய ஹோமியோபதி மருத்துவர் ஜான் மார்டின் இந்தியாவிற்கு அழைக்கப்பட்டார். மருத்துவ வரலாற்றின் படி இவர் தான் இந்தியாவிற்கு வந்த முதல் ஹோமியோ மருத்துவர். பின்பு ஹோமியோ குறித்த தேடல்கள் இந்தியாவில் துவங்கின. படிப்படியாக இந்திய ஹோமியோ மருத்துவர்கள் தங்கள் சுய தேடல்களால் தங்களை உருவாக்கிக்கொண்டார்கள்.

1960 களில் ஹோமியோபதி மருத்துவம் பல மருத்துவர்களால் பின்பற்றப்பட்டது. தொடர்ந்து தனி நபர்கள் ஹோமியோவைக் கற்றுத்தரவும் துவங்கினர். மரபு வழி மருத்துவங்களை ஒழுங்கு படுத்தத்துவங்கியிருந்த அரசிற்கு இந்தப் புதிய மருத்துவ முறை பற்றிய தகவல்கள் தெரியவில்லை. ஒரு வழியாக ஹோமியோபதியைப் பற்றி அறிந்து கொண்ட அரசு நீண்ட கோரிக்கைகள், வலியுறுத்தல்களுக்குப் பிறகு அதனை முழுமையான மருத்துவமாக அங்கீகரித்தது. மாற்று மருத்துவங்களை அங்கீகரிக்கும் பணியில் முன்னோடி மாநிலமாக மேற்கு வங்காளம் இன்று வரை திகழ்கிறது. ஹோமியோபதியை இந்தியாவில் மத்திய அரசிற்கு முன்பாக 1970 களில் அங்கீகரித்ததும், 1990 களில் முதன் முறையாக அக்குபங்சர் மருத்துவத்தை அங்கீகரித்ததும் மேற்கு வங்கம்தான்.

RangaRakes tamilnavarasam.com

இந்தியாவில் ஹோமியோபதி அங்கீகரிக்கப்பட்டதற்குப் பின்னால் அதனை ஒழுங்குபடுத்த Homoeopathy Central council Act 1973 இயற்றப்பட்டது.

இந்தியாவில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவமுறைகளுக்கான கவுன்சில்கள் அமைக்கப்பட்டன. இயற்கை மருத்துவம் மற்றும் யோகா அரசால் அங்கீகரிக்கப் பட்ட பின்பும் கூட இன்று வரை அதற்கான தனி கவுன்சில் அமைக்கப்பட வில்லை. தனித்தனியாக மாநிலங்களில் அமைத்துக் கொள்ளுமாறு மத்திய அரசு வழிகாட்டியுள்ளது.

இயற்கை மருத்துவமுறை நம்முடைய ஆயுர்வேத, சித்த மருத்துவங்களின் அடிப்படைகளோடு இணைந்த மருத்துவம் தான். ஆனால் மேலை நாடுகளில் இருந்து மறுபடியும் இந்தியாவிற்குள் வந்த பின்புதான் இம்முறையை தனி ஒரு மருத்துவமாக கருத முடிந்தது. 1894 ஆம் ஆண்டில் இயற்கை மருத்துவர் கூனேயின் ஆங்கில நூலான “New Science of Healing” கட்டுரைகளை இந்திய மருத்துவர் ஒருவர் தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்தார். இதுதான் இந்தியாவின் முதல் இயற்கை மருத்துவ நூலாக அமைந்தது. பின்பு இதே நூல் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்வாறு இயற்கை மருத்துவம் உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத், மஹாராஷ்டிரா மாநிலங்களில் பரவியது.

இந்திய அரசு இயற்கை மருத்துவத்தை யோகாவோடு இணைத்து 1969 ஆம் ஆண்டில் அங்கீகரித்தது.

### அங்கீகார நடைமுறை

இந்தியாவில் ஒரு மருத்துவ முறை அங்கீகரிக்கப்பட்டால் மத்திய, மாநில அரசுகள் ஒரு சில நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன. இவைகள் அம்மருத்துவங்களை ஒழுங்கு படுத்துவதற்காக பயன்படுகின்றன.

ஒரு மருத்துவம் பின்பற்றப்படுவதை அரசு அறிந்த பிறகு அம்மருத்துவத்திற்கான ஆராய்ச்சி ( Research Council) அமைப்பை நிறுவுகிறது. இந்த அமைப்பு குறிப்பிட்ட மருத்துவத்தின் மீது தன் ஆய்வுகளையும், பயன்பாட்டு நிரூபணங்களையும் நோக்கி தன் பணிகளைத் துவக்குகிறது. இந்தியாவில் 1969 ஆம் ஆண்டில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம், யோகா போன்ற மருத்துவங்களுக்கு ஒட்டு மொத்தமான ஆராய்ச்சி அமைப்பை மத்திய அரசு துவங்கியது. Central council for Research in Ayurvedha, Yoga & Naturopathy, Unani and Homoeopathy என்ற அமைப்பு மேற்கண்ட மருத்துவங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டது. 1978 ஆம் ஆண்டில் தான் ஒவ்வொரு மருத்துவத்திற்கும் தனித் தனியான ஆராய்ச்சி அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன.

ஆயுர்வேதம், சித்த மருத்துவங்களுக்கு ஒரு அமைப்பும், யுனானிக்கு ஒரு அமைப்பும், ஹோமியோபதிக்கு ஒரு அமைப்பும், இயற்கை மருத்துவம் மற்றும் யோகாவிற்கு ஒரு அமைப்பும் என நான்கு ஆராய்ச்சி அமைப்புக்கள் இப்போது இயங்கி வருகின்றன.

இவ்வாறான ஆராய்ச்சி அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்பு குறிப்பிட்ட மருத்துவம் தொடர்பான அனைத்து விஷயங்களையும் இவ்வமைப்பே முடிவு செய்கிறது. பின்பு, மருத்துவக்கல்வியை முறைப்படுத்தும் கவுன்சிலும், தேசிய மருத்துவ நிறுவனமும் துவங்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆராய்ச்சி அமைப்பும் ஒரு தனி தேசிய மருத்துவ நிறுவனத்தை நடத்தி வருகிறது. சென்னையில் இயங்கும் தேசிய சித்த மருத்துவ நிறுவனம் ( National Institute of Siddha ) சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் இயங்கும். கல்கத்தாவில் உள்ள தேசிய ஹோமியோபதி நிறுவனம் ( National Institute of Homoeopathy ) ஹோமியோ ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கும். பூனாவில் உள்ள தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் ( National Institute of Naturopathy ) இயற்கை மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் இயங்கும். இவ்வாறு ஆராய்ச்சி கவுன்சில் அமைக்கப்பட்ட பின்பு ஒரு தேசிய மருத்துவ நிறுவனம் துவங்கப்படுகிறது. அத்தோடு அந்த குறிப்பிட்ட மருத்துவக் கல்வியை முறைப்படுத்த அரசால் கவுன்சில் துவக்கப்படுகிறது.

இந்த கவுன்சில்தான் குறிப்பிட்ட மருத்துவத்திற்கான அதிகாரப்பூர்வமான ஒரே அமைப்பு. உதாரணமாக, இந்திய ஹோமியோபதி மத்திய கவுன்சில் என்ற அமைப்பு ஹோமியோ மருத்துவத்திற்கான அதிகாரப்பூர்வ அமைப்பாகும். ஹோமியோ தொடர்பான எந்த விதமான பயிற்சிகளையும் இந்த கவுன்சிலின் அனுமதியோடு தான் நடத்த முடியும். அதே போல, ஹோமியோவில் பயிற்சி பெற்ற மருத்துவர்களைப் பதிவு செய்யும் மருத்துவர் பதிவேட்டை இந்த கவுன்சில்தான் பராமரிக்கிறது. இப்பதிவேட்டில் பதிவு செய்து கொண்ட நபரைத்தான் “அரசு பதிவு பெற்ற மருத்துவர்” ( Registered Medical Practitioner ) என்று அழைக்கிறோம். இக்கவுன்சிலின் அங்கீகாரம் பெறாத மருத்துவப் பயிற்சி நிறுவனம் அல்லது கல்லூரி போலி கல்வி நிறுவனமாகவும், இக்கவுன்சிலின் பதிவு பெறாத நபரை போலி மருத்துவர் எனவும் அழைக்கிறார்கள்.

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, ஆங்கில மருத்துவம் போன்ற மருத்துவங்களுக்கு கல்வி அங்கீகாரம் வழங்கி, பயிற்சி பெற்றவர்களைப் பதிவு செய்யும் அமைப்புக்கள் தனித்தனியாக தேசிய அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஆங்கில மருத்துவத்தை முறைப்படுத்தும் அமைப்புத்தான் இந்திய மருத்துவக் கழகம் ( Indian Medical Council ) என்னும் தேசிய அமைப்பு. இந்த அமைப்பு ஆங்கில மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம்

RangaRakes tamilnavarasam.com

வழங்குவதும், அதில் பயிற்சி பெற்றவர்களை பதிவு செய்வதும் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

இந்தியாவில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் பெயராக “இந்திய மருத்துவக் கழகம்” இருப்பதால் இது அனைத்து மருத்துவங்களையும் கட்டுப்படுத்தும் அமைப்பு போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இவ்வமைப்பு ஆங்கில மருத்துவத்திற்கு மட்டுமேயான தனி அமைப்பாகும். பிற மருத்துவங்களான சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஹோமியோ ஆகிய மருத்துவங்களுக்கு தனித்தனியான மருத்துவக் கவுன்சில்கள் இயங்குகின்றன. இயற்கை மருத்துவம் மற்றும் யோகாவிற்கு மட்டும் இன்னும் தனியான கவுன்சில் அமைக்கப்படவில்லை. கல்வி தொடர்பான அங்கீகாரத்தை தற்காலிகமாக “இயற்கை மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு” ( Central Council for Research in Yoga and Naturopathy) செய்துவருகிறது. இயற்கை மருத்துவர்களுக்கான மருத்துவர் பதிவை தனிக் கவுன்சில் அமைக்கப்படும் வரை இந்திய தேசிய மருத்துவ கவுன்சில் சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் பதிவேட்டிலேயே வழங்கி வருகிறது.

சித்தா, ஹோமியோபதி, ஆயுர்வேதம், யுனானி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகா போன்ற மருத்துவ முறைகளில் அந்தந்த கவுன்சில்களின் அங்கீகாரம் இன்றி நடத்தப்படும் பயிற்சிகளுக்கு அரசு பொறுப்பேற்காது. அங்கீகாரம் பெறாத நிறுவனங்களில் பயிற்சி பெற்ற நபருக்கு குறிப்பிட்ட மருத்துவப் பதிவேட்டில் பதியப்படும் வாய்ப்பும், மருத்துவராக மருத்துவப் பணியாற்றும் வாய்ப்பும் இல்லை என்பது தான் நம் நாட்டின் அடிப்படைச் சட்டமாகும்.

# 4

# நீதிமன்றங்களில் மாற்று மருத்துவம்

இந்தியாவில் "மாற்று மருத்துவங்கள்" என்ற வார்த்தை ஆங்கில மருத்துவம் தவிர பிற மருத்துவங்களைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகிறது. இது நடைமுறைச் சொல்லாகும். அரசுகளின் பார்வையில் மாற்று மருத்துவம் என்ற சொல் இரண்டு பிரிவுகளாக புரிந்துகொள்ளப் படுகிறது. ஒன்று அங்கீகரிக்கப்பட்ட இந்திய மருத்துவங்கள். அதாவது கவுன்சில்கள் அமைக்கப்பட்ட மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகா போன்ற மருத்துவ முறைகள். இரண்டு அங்கீகரிக்கப்படாத வெவ்வேறு பெயர்களில் பின்பற்றப்படும் மருத்துவ முறைகள்.

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட முறைகளை இந்திய மருத்துவங்கள் என்றும், அங்கீகரிக்கப்படாத முறைகளை மாற்று மருத்துவம் என்றும் மத்திய அரசு அழைக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட இந்திய மருத்துவங்கள் தவிர பிற பெயர்களில் வழங்கப்படும் இதர சிகிச்சை முறைகளை மத்திய அரசு ஒழுங்குபடுத்த வேண்டிய கட்டாயம் 1980 களில் ஏற்பட்டது அதுவும் நீதிமன்றங்கள் வாயிலாக.

இந்திய அரசியல் சாசனச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளில் ஒன்று ஒரு குடிமகன் தனக்குத் தெரிந்த விஷயத்தை தொழிலாகப் பின்பற்றுவதும், அதை கற்றுத்தரவுமான உரிமை. இதனை அரசியல் சாசனச் சட்டம் 19 (1) ஜி வழங்குகிறது. எந்த ஒரு விஷயத்தின் மீது அரசின் கட்டுப்பாடுகள் இல்லையோ அதற்கு இச்சட்டம் பொருந்தும்.

மாற்று மருத்துவங்கள் என அழைக்கப்படும் அரசால் அங்கீகரிக்கப் படாத மருத்துவ முறைகள் குறித்து அரசிற்கு எவ்வித கட்டுப்பாடுகளும், அனுமதியும் இல்லாத 1980 களில் மேற்கு வங்காளத்தில் துவங்கியது பிரச்சினை. இந்தியன் கவுன்சில் ஆஃப் ஆல்டர்நேடிவ் மெடிசின் என்னும் ஒரு தனியார் அமைப்பு மாற்று மருத்துவ முறைகளை பயிற்சி அளிக்கத்துவங்கியது. அக்குபங்சர், மூலிகை மருத்துவம், ரெய்கி, பிராணிக் ஹீலிங், காந்த சிகிச்சை, அக்குபிரஷர், எலக்ட்ரோ ஹோமியோபதி, மலர் மருத்துவம், ஜோதிட மருத்துவம் என வெவ்வேறு பெயர்களில் சான்றிதழ் பயிற்சிகள் ( Certificate courses ),

பட்டயப் பயிற்சிகள் ( Diploma courses ), பட்டப் படிப்புகள் ( Degree courses ), பட்ட மேற்படிப்புகள் ( Post graduate courses ), ஆய்வுப்படிப்புக்கள் ( Research studies ), போன்ற அனைத்துவகை கல்வியையும் அஞ்சல் வழியில் துவங்கியது அந்நிறுவனம்.

இந்நிலையில் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று மேற்கு வங்காள அரசின் காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் மருத்துவக் கல்வியை முறைகேடாக அளிப்பதாகக் கூறி புகார் ஒன்றை அந்நிறுவனத்தின் மீது அளித்தார். இதன் அடிப்படையில் அந்நிறுவனத்தின் தலைவர் டாக்டர்.பிரதிப் குமார் பிஸ்வாஸ் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை Indian Medical Council Act 1956 இன் படியும், மருத்துவக் கல்விச் சட்டத்தின் படியும், போலியான நிறுவனம் நடத்துதல் மற்றும் ஏமாற்றுதல் போன்ற சட்டங்களின் அடிப்படையிலும் எடுக்கப்பட்டது.

டாக்டர்.பிஸ்வாஸ், அரசின் மீது உயர் நீதி மன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தார். அதில் அரசால் தடைசெய்யப்படாத அதே சமயம் அங்கீகாரமும் அளிக்கப்படாத மருத்துவ முறைகளை தன் நிறுவனம் பயிற்சியளிக்க அரசியல் சாசனச்சட்டத்தின் படி தனக்கு உரிமை இருப்பதாக கூறியிருந்தார். இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பகவதி பிரசாத் பானர்ஜி நீண்ட விசாரனைக்குப் பிறகு மே 7 , 1990 அன்று தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பு மாற்று மருத்துவ வரலாற்றில் இன்றளவும் வழிகாட்டக்கூடிய தீர்ப்பாகக் கருதப்படுகிறது. (Matter No: 546 of 1988)

**தீர்ப்பின் முக்கிய விபரங்கள்:**

1. மாற்று மருத்துவங்கள் என்பவை தத்துவ ரீதியாகவும், நடைமுறை அடிப்படையிலும் ஆங்கில மருத்துவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவை.
2. ஆங்கில மருத்துவத்தைக் ஒழுங்குபடுத்த அமைக்கப்பட்ட அமைப்பான Indian Medical Council மற்றும் அதனுடைய சட்டங்கள் மாற்று மருத்துவங்களைக் கட்டுப்படுத்த எந்த ஒரு முகாந்திரமும் இல்லை.
3. அரசால் தடை செய்யப்படாத விஷயம் , அரசால் மேற்கொள்ளப் பாடாததாய் இருந்தால் அதனை எந்த ஒரு குடிமகனும் மேற்கொள்ளலாம்.
4. அரசு பதிவு பெற்ற ஏதாவதொரு அமைப்பு மேற்கண்ட விஷயத்தைக் கற்றுத்தரவும் சட்ட ரீதியான தகுதி உண்டு.

கல்கத்தா உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு மேற்கு வங்காளம் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் இதே மாதிரியான மாற்று மருத்துவக்கல்வியளிக்கும் நிறுவனங்கள் புற்றீசல்கள் போல் படையெடுக்கத் துவங்கின.

இந்த நிறுவனங்கள் வழங்கும் கல்வியில் வேடிக்கை என்னவென்றால் எந்த வகையான கல்வியாக இருந்தாலும் நம் நாட்டில் பொதுக் கல்விச் சட்டங்கள் இருக்கின்றன. அதாவது முதலில் பள்ளிக்கல்வி, தொடர்ந்து பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, இறுதியில் ஆய்வுப் படிப்பு. அதே போல சான்றிதழ் பயிற்சி முடிக்க ஒரு குறைந்த பட்சக் கல்வித்தகுதி, பட்டயப்படிப்பிற்கு ஒரு குறைந்த பட்ச கல்வித்தகுதி. இப்படி ஒரு நடைமுறை உலகம் எங்கும் பின்பற்றப்படுகிறது. உதாரணமாக ஒருவர் பட்ட மேற்படிப்பான எம்.ஏ அல்லது எம்.எஸ்.ஸி படிக்க வேண்டுமானால் அவர் முதலில் பள்ளிக்கல்வியையும், பின்பு பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் படிப்பையும் முடித்திருந்தால் மட்டுமே பட்ட மேற்படிப்பு படிக்க முடியும் இல்லையா? இப்படி எந்த ஒரு நடைமுறையும், விதிமுறையும் இல்லாமல் யாருக்கு எது வேண்டுமோ அவருக்கு ஏதாவது ஒரு பயிற்சியை (சான்றிதழை) வழங்குவது என்று இந்நிறுவனங்களின் போக்கு முறைகேடாக இருந்தது. பள்ளிக்கல்வியே தாண்டாத நபர்கள் கூட M.D சான்றிதழும், PhD சான்றிதழும் பெற முடியும் என்ற அளவிற்கு இந்நிறுவனங்கள் கல்வியை கேலிக்கூத்தாக்கின.



**PLEASE TICK (✓)** | **DIRECT / POSTAL** | **Language : Hindi / English**

**Diploma Courses :-**

- ☐ Naturopathy (ND)
- ☐ Reiki Healing (DRH)
- ☐ Electro Homoeopathy (DEHM)
- ☐ Medical Astrology (DMAS)
- ☐ Magneto Therapy (DMT)
- ☐ Accupressaure Therapy (DAT)
- ☐ Dental Science (DDAS)
- ☐ Aroma Therapy (DATS)
- ☐ Yoga & Massage Therapy (DYMT)
- ☐ Indo Allopathy (DIAMS)
- ☐ Diet & Nutrition Therapy (DDNT)
- ☐ Alternative Medicines (DAMS)
- ☐ Others............

**Bachelor Certification Courses :-**

- ☐ Alternative Medicines-MBBS (AM)
- ☐ Biochemic Medicines-MBBS(Bio)
- ☐ Naturopathy-BAMS (Naturopathy)
- ☐ Electro Homoeopathy-BEHM
- ☐ Dental Science-BDAS
- ☐ Naturopathy & Yoga Therapy-BNYT
- ☐ Accupressure & Magneto Therapy-BAMT
- ☐ Acupuncture-BAMS (Acupuncture)
- ☐ Alternative Medicines- BAMS
- ☐ Indo-Allopathy-BIAMS
- ☐ Others ............

**Special Course**

- ☐ Basic Assistance In Medical System (BAMS)

**Post Graduation Certification Course :-**

☐ MD (AM) ☐ MD (EH)

(i) History, Philosophy, Principles and scope of Alternative Medicines

(ii) Any four of the following :

- ☐ Naturopathy
- ☐ Biochemic Medicines
- ☐ Aroma Therapy
- ☐ Electro Homoeopathy
- ☐ Accupressaure
- ☐ Gem Therapy
- ☐ Acupuncture
- ☐ Magneto Therapy
- ☐ Yoga
- ☐ Medical Astrology
- ☐ Hypno Therapy
- ☐ Others ..........

**Specialisation Diploma Courses**

- ☐ Diploma in Child Health-DCH (AM)
- ☐ Diploma in Gynaecology & Obstetrics-DGO (AM)
- ☐ Diploma in Dermatology Medicines-D.Derm (AM)
- ☐ Diploma in Family Planning & Sex Education-DFPSE (AM)
- ☐ Diploma in Neurology Medicines - DNM(AM)
- ☐ Diploma in ENT - DENT(AM)
- ☐ Diploma in Cardiology Heart Disease - DHD(AM)
- ☐ Diploma in Respiratory Medicines - DRM(AM)
- ☐ Diploma in Oncology & Haematology - DOHM(AM)
- ☐ Others ..........

**Registration for Practice**

RMP

System in which Registration Required :-

- ☐ Alternative Medicines
- ☐ Biochemic Medicines
- ☐ Electro Homoeopathy
- ☐ Naturopathy & Yoga
- ☐ Accupressure & Megnet Therapy
- ☐ Acupuncture
- ☐ Indo Allopathy
- ☐ others ...............

1996 ஆம் ஆண்டு காவல் துறை துணைக்கண்காணிப்பாளரால் கல்கத்தாவில் இயங்கும் மற்றொரு நிறுவனமான Indian Board of Alternative Medicines நிறுவனத்தின் மீது புகார் அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கும் கல்கத்தா உயர்

RangaRakes tamilnavarasam.com

நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. ஏற்கனவே அளிக்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படி இந்த வழக்கிலும் இந்நிறுவனத்திற்கு சாதகமான தீர்ப்பே வெளியானது. தீர்ப்பில் இந்த நிறுவனத்தின் செயல்பாட்டில் அரசுத் துறைகளோ, காவல்துறையோ தலையிடக்கூடாது என்ற உத்தரவும், பயிற்சி வழங்குவதற்கு குறைந்த பட்ச கல்வித் தகுதிகளை நிறுவனமே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடும் இடம்பெற்றிருந்தன. ( C.O No: 13597 (W) 97)

முறையான பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்து வந்தாலும், பல மாற்று மருத்துவக் கல்வி நிறுவனங்கள் வழக்கம்போல் தங்கள் முறைகேட்டை போலியான வரைமுறைகளை வகுத்துக்கொண்டு தொடர்ந்தனர். வியாபார நிறுவனங்களில் சான்றிதழ்களை விலைக்கு வாங்கிய நபர்கள் தங்களை மருத்துவர்களாகக் காட்டிக்கொண்டு ஆங்கில மருத்துவத்தைப் பின்பற்றத் துவங்கினார்கள். இக்காலத்தில் தான் போலி மருத்துவர்கள் பிரச்சினை பெரிய அளவில் தலைதூக்கியது.

இந்நிலையில் டெல்லியைச் சேர்ந்த சேத்தி என்பவர் டெல்லி உயர்நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கைத் தொடர்ந்தார். மாற்று மருத்துவ நிறுவனங்கள் செய்யும் மோசடிகளை வழக்கிற்கான மனுவில் முறையிட்டிருந்தார். இதனை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம் மத்திய, மாநில அரசுகள் உட்பட 46 எதிர்மனுதாரர்களையும் சேர்த்து இவ்வழக்கை விசாரித்தது. இதன் தீர்ப்பு 18.11.1998 அன்று வெளியானது. இத்தீர்ப்பு மாற்று மருத்துவப் பயிற்சிகளை வழங்க மேற்கண்ட நிறுவனங்களுக்கு உரிமை உண்டு என்றும், அதே நேரத்தில் பட்டங்கள், பட்ட மேற்படிப்புக்களுக்கான சான்றிதழ்களை வழங்கக்கூடாது என்றும் உத்தரவிட்டது. மேலும் பயிற்சி மையங்கள் படிப்புகளுக்கான கல்வித்தகுதியைக் கடைபிடிக்க வேண்டுமெனவும், மருத்துவக் கவுன்சிலின் பெயரை பயன்படுத்தக் கூடாது எனவும் கூறியது. மாற்று மருத்துவங்களுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக அரசுகள் ஆவண செய்யவும் டெல்லி உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தது. (CWP. 4015 of 1996, 8468 of 1997).

மாற்று மருத்துவங்கள் தொடர்பான பல்வேறு வழக்குகளில் மேற்கு வங்காளம், கேரளா, கர்நாடகம், மத்திய பிரதேசம், ஆந்திரா, மஹராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் ஹரியானா, அலஹாபாத், டெல்லி, தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் உயர்நீதி மன்றங்கள் இதே மாதிரியான தீர்ப்புக்களை வழங்கின.

முறைகேடாக பட்டங்கள் வழங்கி பழக்கப்பட்ட இந்நிறுவனங்கள் டெல்லி உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, மாற்று மருத்துவர்களைக் காக்கக்கோரி உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தன. மத்திய அரசின் பிரதிநிதிகள் யாரும் மாற்று மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக ஆஜராகவில்லை. உச்ச நீதிமன்றம் 24.11.2000 அன்று “அரசும்,

*காவல்துறையும் மாற்று மருத்துவர்களைத் துன்புறுத்தக் கூடாது அவர்களின் அடிப்படை உரிமையில் தலையிடக்கூடாது”என்ற அடிப்படையில் தன்னுடைய தீர்ப்பை வழங்கியது.* (FAO: 205 /92 ).

*இவ்வாறான நீதிமன்றத் தீர்ப்புக்களின் வழியாகத்தான் நம் நாட்டில் மாற்று மருத்துவங்கள் பாராளுமன்றத்திலும், அரசுகளின் பார்வையிலும் நுழைய முடிந்தது.*

RangaRakes tamilnavarasam.com

# 5

# அக்குபங்சர் அரசு ஆணை

மாற்று மருத்துவங்கள் பற்றிய அறிவு ஒரு வழியாக இந்திய பாராளுமன்றத்திற்கு 1999 ஆம் ஆண்டில் துவங்கியது. மாற்று மருத்துவங்கள் குறித்த நீதிமன்றங்களின் பல்வேறு கேள்விகளுக்கு சரிவர பதிலளிக்க முடியாத மத்திய அரசு அவை குறித்து ஆய்வு செய்ய முடிவு செய்தது. பதினேழு பேர் கொண்ட நிபுணர் குழுவை 1999 ஆகஸ்ட் மாதத்தில் ஏற்படுத்தியது. இக்குழுவின் உறுப்பினர்கள் யார் யார் என்ற விபரங்களையும் மத்திய அரசு வெளியிட்டது.

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர். என்.கே.கங்குலி | - Director General, ICMR |
| 2. | டாக்டர்.வசந்தா முத்துச்சாமி | Dy,Director General, ICMR |
| 3. | டாக்டர்.எஸ்.பி.அகர்வால் | DGHS or Nominee |
| 4. | DG, CSIR or Nominee | |
| 5. | DCG (I) or Nominee | |
| 6. | பேரா. ரஞ்சித் ராய் சௌத்ரி | Emeritus Scientist, National Institute o f Immunology |
| 7. | பேரா.தவான் | - Former Director, CDRI |
| 8. | பேரா.ஹண்டா | - Director, Regional Research Laboratory |
| 9. | டாக்டர்.பண்டே | - Former Director, CCRAS |
| 10. | டாக்டர்.சிங் | - Head faculty, Ayurvedha University |
| 11. | ஹகீம் கலீஃபத்துல்லா | - Unani |
| 12. | Head of The Dept., | Unani Medicine, Jamia Hamdard |
| 13. | டாக்டர்.கண்ணன் | - Chairman, Siddha Pharmacopeal commitee |
| 14. | டாக்டர்.லீனா மெஹண்டல் | - Chairman, Siddha Pharmacopeal commitee |
| 15. | டாக்டர்.ப்ரமிளா சாரி | - Chairman, Siddha Pharmacopeal commitee |

16. டாக்டர்.ஜெ.என்.பண்டே - Chairman, Siddha Pharmacopeal commitee

17. டாக்டர்.ஷர்மா - Director, PGIMER

மேற்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர்கள் ஆய்வுக்குழு 1999 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் பின்பற்றப்படும் மாற்று மருத்துவங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டனர். நடைமுறையில் உள்ள மாற்று மருத்துவ முறைகள் வெறுமனே பெயரளவில் மட்டும் உள்ளனவா அல்லது பின்பற்றப்படுகிறதா என்ற அடிப்படை உண்மைகளைக் கண்டறியும் விதத்தில் இக்குழுவின் பணி இருந்தது.

29.02.2000 அன்று பாராளுமன்றத்தில் (கேள்வி எண்: 752) சு.திருநாவுக்கரசர் ஒரு கேள்வியை முன் வைத்தார். " அக்குபங்சர், தொடு சிகிச்சை மற்றும் ரெய்கி போன்ற மாற்று மருத்துவங்களை வலுப்படுத்த மத்திய அரசிடம் ஏதாவது பரிந்துரைகள் உள்ளனவா? அப்படி இருந்தால் அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன?" இக்கேள்விக்கு அமைச்சர். சண்முகம் "மாற்று மருத்துவங்களின் பல சிகிச்சைமுறைகளை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க "நிபுணர்கள் ஆய்வுக்குழு" ( Research committee of Experts) அரசின் சார்பில் அமைக்கப் பட்டுள்ளது." என்று பதிலளித்தார்.

இக்குழு அமைக்கப்பட்ட பின்பும் நம் பாராளுமன்றத்தில் இது குறித்த கேள்வி எழுப்பப்பட்டது. 29.08.2001 அன்று (கேள்வி எண்: 5600) திரு. அமர் ராய் பிரதான் மாற்று மருத்துவத்தின் அங்கீகாரம் குறித்த கேள்விகளை எழுப்பினார்.

கேள்வி : "அக்குபங்சர் மருத்துவ முறையை அங்கீகரிக்கும் பரிந்துரைகள் எதுவும் அரசிற்கு வந்துள்ளனவா? அரசு அமைத்த ஆய்வுக்குழுவின் அறிக்கை என்ன கூறுகிறது?"

மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பாக அமைச்சர் திரு.ராஜா பதிலளித்தார்.

"இந்திய மருத்துவ ஆராய்ச்சி அமைப்பின் இயக்குநரைத் தலைவராகக் கொண்ட நிபுணர்கள் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு பல வகையான மாற்று மருத்துவ முறைகளை ஆய்வு செய்து வருகிறது. அக்குபங்சர் உள்ளிட்ட பலவகை மாற்று மருத்துவங்கள் குறித்த தங்கள் அறிக்கையை இக்குழு சமர்ப்பித்திருக்கிறது. அரசு அது குறித்த பரிந்துரையை விரைவில் அளிக்கும்"

இவ்வாறு பாராளுமன்றத்தில் பல முறைகள் அக்குபங்சர் மற்றும் மாற்று மருத்துவங்கள் குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றிருக் கின்றன. அரசால் அமைக்கப்பட்ட நிபுணர்கள் ஆய்வுக்குழு தங்கள் பரிந்துரைகளை அளித்த பின்னால் மத்திய அரசு 2003 நவம்பர் 25 ஆம் தேதியன்று மாற்று மருத்துவம் சார்ந்த ஒரு ஆணையைப்

RangaRakes tamilnavarasam.com

பிறப்பித்தது. . (No. R.14015/25/96 - U&H (R) (Pt.). இவ்வாணையை அக்குபங்சர் அங்கீகார ஆணை என்றும், மாற்று மருத்துவங்களை கட்டுப்படுத்தும் ஆணை என்றும் இருவேறுவிதமாக அழைக்கலாம். மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை (ஆய்வுக்குழு) அளித்த இந்த ஆணைதான் மாற்று மருத்துவங்கள் குறித்த ஒரே ஒரு ஆணையாகும்.

அரசு ஆணையில் இடம்பெற்றுள்ள முக்கியப் பகுதிகளைப் பார்க்கலாம்.

1. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமுறைகளாக ஏற்கனவே உள்ள சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகா தவிர இக்குழு புதிதாக எந்த ஒரு மருத்துவத்தையும் "முழுமையான மருத்துவமுறை" (Medical System) என்று பரிந்துரைக்கவில்லை.
2. அதே நேரம் மாற்று மருத்துவ முறைகளில் அக்குபங்சர் மற்றும் ஹிப்னாட்டிசம் ஆகிய இரண்டு முறைகளை சிகிச்சை முறைகளாக (Therapy) அங்கீகரிக்கிறது.
3. அக்குபங்சர் மற்றும் ஹிப்னாட்டிச முறைகளை ஏற்கனவே அரசு பதிவு பெற்ற மருத்துவரோஅல்லது முறையாகப் பயிற்சி பெற்ற நபரோ (Registered Medical Practitioner or Appropriately trained personnel) சிகிச்சைமுறைகளாகப் பின்பற்றலாம்.
4. இந்த சிகிச்சை முறைகளைப் பின்பற்றும் நபர்கள் டாக்டர் என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது.

இவ்வாறான பரிந்துரைகளுடன் மத்திய அரசின் ஆணை அமைந்திருந்தது. நம் நாட்டில் அமைந்துள்ள பல்வேறு மாற்று மருத்துவக் கல்வி நிறுவனங்கள் இந்த ஆணையின் படிதான் இயங்குகின்றன.

இதில் நாம் தெளிவடைய வேண்டியது இரண்டு விதமான வார்த்தைகளில் தான்.

"முழுமையான மருத்துவ முறை" என்பது நோயறிதல் மற்றும் சிகிச்சை முறைகளைக்கொண்ட அங்கீகரிக்கப் பட்ட மருத்துவ முறையாகும். "சிகிச்சை முறை" என்பது நோயறிதலைக் கருத்தில் கொள்ளாமல் சிகிச்சைக்கு மட்டும் பயன்படும் முறையாகும். அப்படியானால் அக்குபங்சரில் நோயறிதல் முறை இருக்கும் போது அதை ஏன் முழுமையான மருத்துவ முறையாக அங்கீகரிக்கவில்லை என்ற கேள்வி நமக்கு எழலாம். ஒரு மருத்துவ முறை நோயறிதல் முறைகளோடு உள்ளதா என்பது அதன் நடைமுறைப் பயன்பாட்டில்தான் நிரூபணமாகும். முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமுறைகள் அனைத்தும் நம் நாட்டில் நீண்ட காலப் பயன்பாட்டில் இருந்தவை. அவற்றின் முழுமைத் தன்மை பற்றி அறிய

RangaRakes tamilnavarasam.com

*அவை பின்பற்றப் பட்ட காலமும், அதற்காக அமைக்கப்பட்ட ஆய்வு அமைப்பும் முக்கியமானவைகளாகும். அக்குபங்சரைப் பொறுத்த வரை இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தான் நம் நாட்டில் ஓரளவாவது புழக்கத்திற்கு வந்தது. மத்திய அரசோ அல்லது மாநில அரசோ அக்குபங்சருக்கான ஆய்வு அமைப்பை ஏற்படுத்தவில்லை. எனவே அக்குபங்சர் தற்காலிகமாக சிகிச்சை முறையாக அங்கீகரிக்கப் பட்டிருப்பது நல்ல விஷயம்தான்.*

*மரபு வழி நோயறிதல் முறைகளை குழிதோண்டிப் புதைத்து விட்டு, ஆங்கில மருத்துவத்தின் பரிசோதனை முறைகளைக் கலந்து "முழுமையான மருத்துவமுறை" என்று அங்கீகரிப்பதைக் காட்டிலும், இப்போதைக்கு சிகிச்சை முறையாக இருந்து அக்குபங்சரின் மரபு வழி நோயறிதல் முறைகள் பயன்பாட்டு நிரூபணம் செய்யப்பட்ட பின்னால் கிடைக்கும் அங்கீகாரம் என்பது தான் சக்திவாய்ந்தது.*

*மத்திய அரசின் தெளிவான ஆணைக்குப் பின்பும் மாற்று மருத்துவக் கல்வியை வியாபாரமாக்கும் நிறுவனங்கள் வார்த்தைகளை மாற்றி தங்கள் வாணிபத்தை வளர்க்கின்றனர்.*

RangaRakes tamilnavarasam.com

# 6
# அக்குபங்சர் சிகிச்சையாளர் யார்?

"அரசு பதிவு பெற்ற மருத்துவர்" என்ற பதிவை அரசின் சார்பில் அந்தந்த மருத்துவங்களுக்கான கவுன்சில்கள் வழங்கும் என்பதை முன்பே பார்த்தோம். இத்தகைய பதிவை தனியார் அமைப்புக்கள் வழங்க எவ்விதமான சட்டப் பூர்வமான வழிமுறைகளும் இல்லை. ஆனால் இந்தியாவில், தமிழகத்தில் பல தனியார் அமைப்புக்கள் கவுன்சில் என்ற பெயரைப் பயன்படுத்திக் கொண்டு பதிவுச் சான்றிதழ் களை (R.M.P- Registered Medical Practitioner) வழங்கி வருகின்றனர். இந்த பதிவுச் சான்றிதழ்களைக் கொண்டு எந்த ஒரு மருத்துவத்தையும் பின்பற்றி சிகிச்சையளிக்க முடியாது.

அதே போல அரசால் கவுன்சில்கள் அமைக்கப்பட்டுள்ள சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகா போன்ற முறைகளில் அந்தந்த கவுன்சில்களின் அனுமதியின்றி நடத்தப்படும் பயிற்சிகள் அங்கீகாரமற்றவை. இவ்வகையான அங்கீகாரமற்ற தனியார் நிறுவனங்களில் பயிற்சி முடித்த நபர்கள் எந்த ஒரு மருத்துவராகவும் பணியாற்ற முடியாது. சான்றிதழ் விற்கும் வேலையில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்கள் மேற்கண்ட மருத்துவ முறைகளில் சான்றிதழ், பட்டயப் பயிற்சிகளை (Certificate, Diploma) நடத்தி வருகின்றன. இவ்வகைப் பயிற்சிகளும் தனித் தனியான மருத்துவக் கவுன்சில்களின் அனுமதி பெறாதவைதான்.

உதாரணமாக தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக்கழகம் சித்த மருத்துவத்தில் பட்டயப் பயிற்சியைத் துவங்கியது. சித்த மருத்துவத்திற் கான கவுன்சிலின் அனுமதி பெறாமல் துவங்கப்பட்ட இப்பயிற்சியை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட கவுன்சில் நீதிமன்றத்தை நாடியது. இப்போது அந்தப் பயிற்சி நிறுத்தப்பட்டுள்ளது. அதே போல ஹோமியோபதியில் அரசு உதவி பெறும் நிறுவனம் ஒன்று ஹோமியோ மருந்தாளுனர் என்ற புதிய பயிற்சியை ஹோமியோ கவுன்சிலின் அனுமதியின்றி துவங்கியது. சில மாதங்களில் அப்பயிற்சி கவுன்சிலின் தலையீட்டால் நிறுத்தப்பட்டது.

இயற்கை மருத்துவம் மற்றும் யோகா முறைக்காக ஆராய்ச்சி அமைப்பு (CCRYN) மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளதை நாம் ஏற்கனவே பார்த்தோம். தமிழகத்தில் செயல்படும் பல்கலைக்கழகங்கள்

சிலவும், சில தனியார் அமைப்புக்களும் இயற்கை மருத்துவம் மற்றும் யோகாவில் கவுன்சில் அனுமதியின்றி பட்டயம் மற்றும் பட்டப்படிப்புக் களைத் துவங்கின. தமிழகத்தில் 80,000 மாணவர்கள் இப்பயிற்சியை முடித்தனர். பயிற்சி முடித்தவர்களின் சங்கம் சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. தங்களுக்கு இயற்கை மருத்துவம் மற்றும் யோகா கவுன்சிலில் பதிவு வழங்க வேண்டுமென அவர்கள் கோரினர். இதன் அடிப்படையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களை யோகா பயிற்சியாளர்களாக, சிகிச்சையாளர்களாக (Yoga Therapist) ஏற்றுக்கொள்ளலாமென்றும், இயற்கை மருத்துவக் கவுன்சிலில் மருத்துவர் பதிவு தர இயலாது என்றும் கூறப்பட்டது.

கவுன்சில் அமைக்கப்பட்ட மருத்துவ முறைகளில் எந்த விதமான பயிற்சியையும் தனியாரோ அல்லது அரசாங்கமோ துவங்க விரும்பினால் சம்பந்தப்பட்ட கவுன்சிலின் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படவில்லையானால் அது அரசு நிறுவனமே நடத்தும் பயிற்சியானாலும் செல்லாது என்பது தான் சட்ட ரீதியான நடைமுறை.

சரி, நாம் மத்திய அரசு வழங்கிய ஆணையின் அடிப்படையில் அக்குபங்சர் மற்றும் ஹிப்னாட்டிசத்தை யார் யார் சிகிச்சை முறையாகப் பயன்படுத்தலாம் என்பதை அறியலாம். நாம் ஏற்கனவே பார்த்த அந்த ஆணையின் படி அரசு பதிவு பெற்ற மருத்துவரோ அல்லது முறையாகப் பயிற்சி பெற்ற நபரோ சிகிச்சை முறைகளாகப் பின்பற்றலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (Could be allowed to practice by Registered Practitioners or Appropriately trained personnel).

இதில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகளில் சிறு மாற்றம் செய்து சில நிறுவனங்கள் தங்கள் சான்றிதழ் வியாபாரத்தை நடத்தி வருகின்றன. Registered Practitioners or appropriately trained personnel என்ற வரியில் or என்ற வார்த்தை “மற்றும்” என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதை நீக்கிவிட்டு with என்ற வார்த்தையை சில நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. அதாவது அக்குபங்சர் மருத்துவத்தை ஒரு பதிவு பெற்ற நபர் முறையாகப் பயிற்சி பெற்று பின்பற்றலாம் என்று இந்த மாற்றத்தால் அர்த்தம் மாறுகிறது. அப்படி அரசு ஆணை குறிப்பிடுவது with என்ற வார்த்தையாக இருந்தால், டாக்டர் என்ற சொல்லைப் பற்றிய பேச்சே இருந்திருக்காது. ஏனென்றால் பதிவு பெற்ற மருத்துவர் ஏற்கனவே டாக்டர் என்ற சொல்லை பயன்படுத்துபவர் தானே?

சரி, இவ்வாறு வார்த்தை மாற்றம் செய்வதால் இந்நிறுவனங்களுக்கு என்ன லாபம்? “பதிவு பெற்ற மருத்துவர்தான் அக்குபங்சரைப் பின்பற்ற வேண்டும். அதனால் எங்கள் நிறுவனத்திடம் இந்தப் பதிவுச் சான்றிதழைப் பெறலாம்’’என்று இந்நிறுவனங்கள் போலி

RangaRakes tamilnavarasam.com

பதிவுச்சான்றிதழ்களின் விற்பனையை பெருக்குகின்றன. ஆனால் அரசு ஆணை மிகத்தெளிவாக "முறையாகப் பயிற்சி பெற்ற நபரோ அல்லது பதிவு பெற்ற நபரோ அக்குபங்சரில் சிகிச்சையளிக்கலாம்" என்று கூறுகிறது. இந்த ஆணை பற்றிய பாராளுமன்ற விவாதத்திலும் இவ்விஷயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (23.07.2004 கேள்வி எண்: 1098).

முறையாகப் பயிற்சி பெற்ற நபர் (appropriately trained personnel) என்ற விஷயத்தை நம் நாட்டு சட்ட நடைமுறைகளின் படி மூன்று படிநிலைகளில் புரிந்துகொள்ளலாம்.

1. முறையாகப் பயிற்சியளிக்க அரசால் கவுன்சிலோ அல்லது ஆராய்ச்சி அமைப்போ ஏற்படுத்தப் படாத நிலையில் எந்த ஒரு அமைப்பும் இப்பயிற்சியை வழங்கலாம். ஒரு தனியார் அமைப்பு முறையான விதிமுறைகளை ஏற்படுத்தி, மாநில அல்லது மத்திய அரசில் தன்னைப் பதிவு செய்து கொண்டு அரசால் முறைப்படுத்தப் படாத பயிற்சிகளை வழங்கலாம். இதற்கு ஒரு எல்லை உண்டு. இப்பயிற்சிகளை அரசு முறைப்படுத்தும் வரை இதைத்தொடர முடியும். இது தனியார் கல்வி நிறுவனம் ஆகும்.
2. மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவி பெறும் சுயாட்சி அமைப்புகளின் பயிற்சிகள் இரண்டாம் வகையாகும். இவ்வகைப் பயிற்சிகளுக்கு உதாரணம் ஜெ.எஸ்.எஸ் (மக்கள் கல்வி நிறுவனம்) மற்றும் பி.எஸ்.எஸ். (தேசிய அபிவிருத்திக் குழு) போன்றவற்றின் பயிற்சிகளாகும். ஜெ.எஸ்.எஸ். என்பது மத்திய அரசோடு இணைந்து ஒரு தனியார் நிறுவனம் அரசின் நோக்கங்களுக்காக உதவி பெற்றுக்கொண்டு பயிற்சியளிக்கும் அமைப்பாகும். பி.எஸ்.எஸ். என்பது பாராளுமன்றத்தின் அனுமதியோடு அரசின் நோக்கங்களுக்காக துவங்கப்பட்ட அமைப்பாகும். இந்த இரண்டு அமைப்புகளும் நேரடி அரசு அமைப்புகள் அல்ல; ஆனால் அரசு சார்புபெற்ற தனியார் நிறுவனங்கள். இவ்வகை அமைப்புக்களின் பயிற்சிகள் முழுமையான தனியார் அமைப்புகளின் பயிற்சிகளை விட மதிப்பு வாய்ந்தது.
3. பல்கலைக்கழகங்கள் நடத்தும் பயிற்சிகள் மேற்கண்ட இரண்டு விதமான அமைப்புக்களின் பயிற்சிகளை விட மேம்பட்டது. ஏனெனில் ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்துவது என்பது அந்தந்த அரசுகளின் அங்கீகாரத்தோடும், தொலைநிலைக் கல்வி கவுன்சிலின் அனுமதியோடும், பல்கலைக்கழக மானியக்குழுவின் அங்கீகாரத்தோடும் நடக்கிறது. ஒரு அரசு பதிவு பெற்ற தனியார் அமைப்பை விட, அரசு சார்பு பெற்ற தனியார் அமைப்பை விட பல்கலைக்கழகங்கள் முதன்மையானவைகளாகும்.

மேற்கண்ட முறைகளில் பயிற்சிகளை நடத்தும் போது ஏற்கனவே நடைமுறையில் உள்ள அங்கீகாரம் பெற்ற மருத்துவங்களின் பயிற்சி

போன்றே தோற்றமளிக்கும் பெயர்களை பயன்படுத்தக் கூடாது. உதாரணத்திற்கு M.D (Doctor of Medicine) என்பது பிற மருத்துவ முறைகளின் பட்ட மேற்படிப்பாகும். இதனைப் போன்றே அக்குபங்சரில் M.D (Acu) – Master Designation என்றோ Master Diploma என்றோ பயிற்சியின் பெயரை அமைத்துக் கொள்வது ஆட்சேபத்திற்கு உரியதாகும். தவிர, ஆங்கில மருத்துவர்கள் போலவும், பிற மருத்துவ முறைகளைப் பயின்றவர்கள் போலவும் போலியாக இப்பெயரை பயன்படுத்த வாய்ப்புக்களும் உண்டு.

முன்பு 1990 களில் M.D (USA) என்று ஒரு சான்றிதழ் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்தது. நாம் நினைப்பது போல USA என்பது அமெரிக்காவின் பெயர் அல்ல. மாறாக U என்பது யுனானியையும், S என்பது சித்தாவையும், A என்பது ஆயுர்வேதத்தையும் குறிக்குமாம். எப்படிப்பட்ட ஏமாற்று வேலை இது. இன்றும் இது போன்ற பிற மருத்துவங்களின் பெயர்களைப் போல தோற்றமளிக்கும் பெயர்கள் புழக்கத்தில் உள்ளன, இது போன்ற பயிற்சிகள் அரசு கவுன்சில் ஏற்படும் போது மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்துவதோடு, பிற மருத்துவங் களின் கவுன்சில்களின் ஆட்சேபனைக்கும் ஆளாக நேரிடும்.

அக்குபங்சருக்கான தனி கவுன்சிலை அரசு ஏற்படுத்துகிற வரைக்கும் அல்லது அக்குபங்சர் பயிற்சி நடத்துவதற்கான வழிகாட்டும் நெறிமுறைகளை அரசு ஏற்படுத்துகிற வரைக்கும் மேற்கண்ட மூன்று விதங்களில் பயிற்சி முறைகளைத் தொடரலாம். இவ்வகையில் சான்றிதழ் பெற்ற அனைவருமே மத்திய அரசு ஆணையின் படி அக்குபங்சர் சிகிச்சையளிக்கத் தகுதி பெற்றவர்கள் ஆவர்.

அக்குபங்சரின் பெயரால் உலக அளவிலும், இந்திய அளவிலும் விதம் விதமான போலி சான்றிதழ்கள் நடப்பில் உள்ளன. அவற்றை ஆராய்வோம்.

RangaRakes tamilnavarasam.com

# 7

# இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உலகத்திருவிளையாடல்

அக்குபங்சர் என்றவுடன் உடனே நினைவுக்கு வருவது M.D (Acu) என்ற பட்டத்தின் பெயர்தான். ஏனெனில் அக்குபங்சரை இந்தியாவிற்கும், தெற்கு ஆசியா முழுவதும் கொண்டு சேர்த்த டாக்டர்.ஆண்டன் ஜெயசூர்யா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது தான் இந்த பட்டம். The Open International University for Complementary Medicines (OIUCM) என்ற ஒரு நிறுவனத்தின் மூலம் இந்த பட்டம் உலகம் முழுவதும் வழங்கப்பட்டது. M.D (Acu) என்ற பட்டத்தை வழங்கியதில் முதல் நிறுவனம் இதுதான். பின்பு இந்நிறுவனத்தைப் பின்பற்றி பல நிறுவனங்கள் இந்தியாவிலும், உலகெங்கிலும் இதே மாதிரியான பட்டங்களை வழங்கத்துவங்கின. நாம் முதலில் OIUCM குறித்தும், தொடர்ந்து பிற நிறுவனங்கள் குறித்தும் பார்ப்போம்.

OIUCM என்ற இந்த அமைப்பு இலங்கையில் 1962 முதல் செயல்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அக்காலத்தில் இதன் பெயர் கூட்டு மருத்துவ நிறுவனம் என்பதாக இருந்தது. மரபு வழி மருத்துவங்களோடு ஆங்கில மருத்துவத்தை எவ்வகையில் இணைத்துச் செய்யலாம் என்ற நோக்கோடு டாக்டர்.ஆண்டன் சில மருத்துவ

RangaRakes tamilnavarasam.com

முறைகளை தான் பணியாற்றிய இலங்கை அரசு மருத்துவமனையில் பரீட்சார்த்த ரீதியில் செய்துபார்த்தார். டாக்டர்.ஆண்டன் ஜெயசூர்யா ஆங்கில மருத்துவம் பயின்றாலும், ஹோமியோபதி மற்றும் பிற மாற்று மருத்துவங்களின் மேல் தீராத ஆர்வமுள்ளவராக இருந்தார். 1974 ஆம் ஆண்டில் சீனா சென்று இலங்கை அரசின் நிதி உதவியுடன் அக்குபங்சர் பயின்று வந்தார். பின்பு 1975 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை அரசு மருத்துவமனையின் ஒரு பிரிவில் ஆங்கில மருத்துவத்தோடு அக்குபங்சரையும் சிகிச்சைக்காக பயன்படுத்தி வந்தார். பிற மருத்துவமுறைகளின் மருத்துவர்களுக்கு இலங்கை அரசு அனுமதியோடு அக்குபங்சர் பயிற்சியளித்தார். இப்படி ஆரம்பித்த அக்குபங்சர் பயிற்சி மேலும் சில நபர்களை இணைத்துக்கொண்டு ஒரு தனியார் நிறுவனமாக மாற்றப்பட்டது. இந்த நிறுவனம்தான் OIUCM. இது அக்குபங்சர் மட்டுமல்லாது பல மருத்துவமுறைகளிலும் பட்டச்சான்றிதழ்களை வழங்கத் துவங்கியது.

இந்தியாவிற்குள் ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் நுழைந்து ஒரு குறிப்பிட்ட துறையில் பயிற்சியளித்து, சான்றிதழ்களை வழங்குவதாக இருந்தால் அதற்கென்று சில வழிமுறைகள் உள்ளன. உதாரணமாக மத்திய அரசு 2008 மார்ச் 10 ஆம் தேதி அரசிதழில்



வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இந்தியாவிற்குள் வருவதற்கான விதிமுறைகளை அறிவித்திருந்தது. இதுவரை மருத்துவப் பட்டங்களை இந்திய மாணவர்களுக்கு வழங்குவதற்காக ரஷ்யா, ஆஸ்திரேலியா, கனடா, நியுசிலாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் மட்டுமே அனுமதிக்கப் பட்டிருப்பதையும் அந்த அறிவிப்பு விவரிக்கிறது.

ஒரு வெளிநாட்டு பல்கலைக்கழகம் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முதலில் இந்திய வெளியுறவுத்துறையில் விண்ணப்பித்து தடையில்லாச் சான்று பெற வேண்டும். பின்பு, பயிற்சியளிக்க விரும்பும் பல்கலைக் கழகத்தின் தாய்நாட்டு அங்கீகாரம் மற்றும் பட்டங்கள் வழங்குவதற்கான அரசு ஆணைகள் சரிபார்க்கப்படும். தொடர்ந்து அந்நிறுவனம் பயிற்சி நடத்த விரும்பும் துறையின் தனி அங்கீகாரமும் பெற வேண்டும். உதாரணமாக மருத்துவம் சார்ந்த பயிற்சியளிக்க விரும்பினால் வெளியுறவுத்துறையின் அனுமதியும், மக்கள் நல்வாழ்வுத்துறையின் அங்கீகாரமும் அவசியமாகும். வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கான இந்திய விதிமுறைகள் இவ்வாறு இருக்க, OIUCM எந்த ஒரு விதிமுறையையும் பின்பற்றாமல் தனிநபர்கள் மூலம் விளம்பரம் செய்து சான்றிதழ்களை நம் நாட்டில் வழங்கி வருகிறது.

வெளிநாட்டு நிறுவனத்தின் சான்றிதழை இந்தியக் குடிமகன் ஒருவர் வைத்திருக்கும் போது சில தெளிவுகள் அவசியமாக இருக்கிறது. அந்தச் சான்றிதழில் வழங்கப்பட்ட இடம், நாடு குறிப்பிடப்பட்டிருக்கும். அது மிக முக்கியமானது. சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடம் வெளிநாடாக இருந்தால் (உதாரணம் : கொழும்பு) அந்த நாட்டிற்கு சென்று திரும்பிய ஆவணங்கள் (பாஸ்போர்ட், விசா) சான்றிதழ் வைத்திருப்பவரிடம் இருக்க வேண்டும். சான்றிதழில் குறிப்பிடப் பட்டிருக்கும் இடம் இந்தியாவாக இருந்தால் அந்த பல்கலைக்கழகத்தின் ஆவணங்கள் (தடையில்லாச்சான்று, அங்கீகார எண், உள்நாட்டு அனுமதி எண்) இருக்க வேண்டும். ஆனால் OIUCM விஷயத்தில் இந்த இரண்டுமே குழப்பம்தான். சான்றிதழ் வைத்திருப்பவர் இலங்கையும் போகவில்லை, அந்தப் பல்கலைக்கழகம் இந்தியாவிற்கும் வரவில்லை. ஆனால் சான்றிதழ்கள் மட்டும் எப்படியோ வந்துவிட்டன.

ஒவ்வொரு நாட்டிலும் பல்கலைக் கழகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக பல்கலைக் கழக மானியக் குழுக்கள் (University Grant Commission) அந்நாட்டு அரசாங்கங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே மாதிரியான சட்டங்களுடன் UGCஅமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. உலக அளவில் UGC அமைப்புக்களின் சட்ட திட்டங்கள் ஒரு பொதுத் தன்மையோடு இருக்கும். உதாரணமாக...

1. மேல்நிலைப் பள்ளிக் கல்வி (+2) முடித்த பிறகு இளங்கலைப்பட்டம் படிக்க அனுமதிப்பது.

2. இளநிலைக் கல்வி முடித்தவுடன், முதுநிலை பட்டம் படிக்க அனுமதிப்பது.

3. முதுகலைக்குப் பின்பு டாக்டரேட் பெற அனுமதிப்பது.

... போன்றவை பொதுவிதிகள். எல்லா நாடுகளும் இவற்றையே பின்பற்றுகின்றன. (சீனா போன்ற சில நாடுகளில் மட்டும் பள்ளிக் கல்வியோடு இளங்கலைப் பட்டமும் தொடர்ச்சியாக (5+6+3) உள்ளது.) சரி; இலங்கை சான்றிதழுக்கு வருவோம். OIUCM வழங்குவது முதுகலைப்பட்டம் மற்றும் டாக்டரேட் பட்டங்களாகும். இலங்கை, இந்திய கல்வித் தகுதி விதிகளின்படி முதுகலைப்பட்டங்கள் பெற பள்ளிக்கல்வியும், இளங்கலைப்பட்டமும் (12+3) அவசியமாகும். பள்ளிக்கல்வி கூட முடிக்காத பலர் M.D(Acu) / Ph.D (Acu) சான்றிதழ்களைப் பெற்று வைத்திருக்கிறார்கள். இது முறையான சான்றிதழ்தான் என்று உலகின் எந்த ஒரு சட்டமும் கூறுவதற்கு வழியேயில்லை.

முறையான ஒரு வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பார்த்தோம். இவற்றில் எதையுமே OIUCM பின்பற்றவில்லை. இலங்கை OIUCM வழங்கிய பட்டங்களில் பதிவாளரோடு சேர்த்து நான்கைந்து பேர் கூட்டாக கையெழுத்துப் போட்டிருப்பார்கள். சரி; கையெழுத்து கூடுதலாகத் தானே இருக்கிறது. இருந்துவிட்டுப் போகட்டும். ஒரே வருடத்தில் வழங்கப்படும் நூற்றுக்கணக்கான பட்டங்களில் உள்ள பதிவாளர் கையெழுத்து ஒரே மாதிரியாக இல்லை. பணி மாறுதல்களில் வேறு வேறு பதிவாளர்கள் வந்திருப்பார்கள் என்றாலும் ஒரு வருடத்தில் 100 பேருக்கு மேலே மாறுவார்களா? அப்படி மாறுவார்கள் என்றால் அது பல்கலைக் கழகமே இல்லை. தோராயமாக 30,000 பட்டங்கள் OIUCM ஆல் தமிழகத்தில் விற்கப்பட்டிருக்கின்றன. யார், யாருக்கு வழங்கப்பட்டது? எந்த வருடம் எந்த தேதியில் வழங்கப்பட்டது? என்ன பட்டம் கொடுக்கப்பட்டது? பெற்றவர் தகுதி முகவரி என்ன? ... போன்ற குறிப்புகள் சாதாரண டுடோரியல் காலேஜ்களில் கூட பராமரிக்கப்படுகிறது. ஆனால், OIUCM இல் படித்த மாணவர்கள் பற்றிய விபரங்கள் OIUCM இல் இல்லை. OIUCM பட்டங்களைச் சுமந்து திரிகிற மருத்துவர்களை 'போலி பட்டம்' பெற்றவர்கள் என்று கூறுவது நியாயம் தானே?

இலங்கைத் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படும் OIUCM பற்றி இப்படி சட்ட ரீதியான விஷயங்களை அறிந்து கொண்ட போது எங்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. OIUCM என்று ஒரு பல்கலைக்கழகம் இலங்கையில் இருக்கிறதா? இல்லையா? என்பதுதான் அது. இக்கேள்விக்கு விடைகாண நாங்கள் இருவர் இலங்கை செல்வதாக முடிவெடுத்தோம். நானும் மதுரை வழக்கறிஞர். பாரதி பாண்டியனும் சென்றுவரத் தயாரானோம்.

"எண் 28, இன்டர்நேசனல் புத்திஸ்ட் சென்டர் ரோடு, கொழும்பு 6" என்ற முகவரியோடு கொழும்பு நகரம் முழுக்க முழுக்க

தேடித் திரிந்தோம். மூன்று நாட்களுக்குப் பிறகு கொழும்பு 6 என்பது புறநகர்ப் பகுதியில் உள்ள 'வெள்ளவத்த' என்ற பகுதி என்பது ஒருவழியாகத் தெரிந்தது. கொழும்பிலிருந்து 15,20 கி.மீக்கு அப்பால் இருந்த அந்த சிறுபகுதியில் 'யுனிவர்சிட்டி'யைக் கண்டுபிடிக்க நிறைய




இலங்கை சென்று பட்டம் பெற்றுத்திரும்பும் நபர்கள்
இந்தக் கட்டிடத்தின் முகப்பில் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள்.
இது அரசுக்குச் சொந்தமான பண்டாரநாயகே ஹால்.

சிரமப்படவேண்டியிருந்தது. இன்டர்நேசனல் புத்திஸ்ட் ரோடு என்ற பெயர் கொண்ட அந்த பத்தடிச் சந்தை பார்த்தபோது விஷயம் விளங்கிவிட்டது.'எண்: 28' இல் நாங்கள் போய் நின்ற போது அது ஒரு வீடு என்பது தெரிந்தது. வீடா? யுனிவர்சிட்டியா? என்று அந்த காம்பவுண்டைச் சுற்றி வந்தபோது "The Open International University for Complementary Medicines" என்று வீட்டின் உள்பக்கச் சுவற்றில் (போர்டு அல்ல) மையில் எழுதப்பட்டிருந்தது. கார் செட்டில் அக்குபங்சர் லோகோ வரையப்பட்டிருந்தது. கடைசியாக, வீட்டில் விசாரித்ததில் அது ஆண்டன் ஜெயசூர்யாவின் வீடு என்பதும், அவ்வீட்டின் (பத்துக்குப்பத்து அளவுள்ள) முன்னறைதான் 'யுனிவர்சிட்டி' OIUCM என்பதும் தவிர வேறு எந்த தகவலும் தர மறுத்துவிட்டார்கள். டாக்டர். ஆண்டன் ஜெயசூர்யாவின் ('நோபல் பரிசு வாங்கினார்' என்று பரப்பப்பட்ட செய்திக்குள் நாம் போனால் அது ஒரு தனிக்கதை.) நண்பரும் தற்போதைய 'யுனிவர்சிட்டி'யின் பொறுப்பாளருமான திரு. கீதான்ஜன் மெண்டிஸ் அவர்களின் கிளினிக் சென்றால் மேலும் தகவல்கள் பெறலாம் என்றறிந்தோம்.

பத்து கட்டிடங்கள் கடந்து, அதே சந்தில் இருந்த கிளினிக்கிற்குச் சென்றோம். அதுதான் 'யுனிவர்சிட்டி'யின் புதிய கட்டிடம் என்று கூறினார்கள். சுமார் 30,000 மருத்துவர்களுக்கு பட்டங்கள் கொடுத்த




இலங்கை பல்கலையின் முகம்  மற்றும் பற்களுக்கான
(நான்கடி அகல) ஆராய்ச்சித்துறை.




10X10 அளவுகள் பல்கலைக்கழகம்

அந்த 'யுனிவர்சிட்டி'யில் நாங்கள் நுழைந்தபோது அங்கிருந்த மாணவர்கள் இரண்டுபேர். ஒரு நோயாளிக்கு அக்குபங்சர் சிகிச்சை (16 நீடில்கள் + 2 ஸ்டிமுலேட்டர்கள்) கொடுக்கப்பட்டது. 'அப்பாடா... அக்குபங்சர் இருக்கிறது' என்று பார்க்கும்போதே அங்கிருந்த ஆங்கில மருந்துகள் அடங்கிய செல்ப் கண்ணில் பட்டது. நாங்கள் இந்தியாவிலிருந்து வந்த தகவலை டாக்டருக்கு போனில் சொன்ன பின்பு  நான்கு மணி நேரம் காத்திருந்தும் டாக்டர். கீதான்ஜன் வரவேயில்லை... வழக்கமாக கிளினிக்கில் டாக்டர் இருக்க வேண்டிய அந்த நேரம் முடியும் வரைக்கும்.டாக்டர். கீதான்ஜன்  ஒரு அலோபதி மருத்துவர். அரசு மருத்துவமனையில் பணியாற்றுகிறார். அக்குபங்சரும் யுனிவர்சிட்டியும் அவருடைய பொழுதுபோக்கு அம்சங்கள்.'யுனிவர்சிட்டி' என்ற பெயரை எப்படி அரசு அனுமதித்தது? இது கல்வி கற்பிக்க அங்கீகாரம் பெற்றுள்ளதா? போன்ற பல கேள்விகளோடு கொழும்பு அரசு சார்ந்தவர்கள், அலுவலர்களிடம் தகவல்கள் பெற்றோம்.

இலங்கையில் எலிமெண்டரி ஸ்கூலுக்கு காலேஜ் என்றும், டுடோரியல் நிறுவனத்தை 'யுனிவர்சிட்டி' என்றும் வார்த்தை







**'காலேஜ்' என்ற வார்த்தையின் இலங்கைப் பயன்பாடு.**

*பயன்பாடுகள் கல்வி தொடர்பான மிகச் சாதாரணமான புழக்கத்தில் அங்கு உள்ளன OIUCM- என்பது ஒரு தனியார் அறக்கட்டளை. அங்கு தனிப்பட்ட பயிற்சிகளை வழங்கி வருகிறார்கள். அது ஒரு பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகமோ, அரசு அங்கீகாரம் பெற்ற கல்லூரியோ, கவுன்சில் அனுமதி பெற்ற கல்வி நிறுவனமோ அல்ல. இந்த விபரங்கள் OIUCM- ஐ புரிந்து கொள்ளச் போதுமானது.*

*கடைசியாக இரண்டு விஷயங்கள் OIUCM- சார்பில் இப்போது ஒரு அறிவிப்பு வெளிவந்துள்ளது. அதில் OIUCM- வழங்கிய சான்றிதழ்கள் வெறும் பயிற்சி சான்றிதழ்களே என்றும், அதை வைத்து 'டாக்டர்' என்று போடக்கூடாது என்றும், சான்றிதழ் பெற்றவர்கள் மருத்துவப்பணியில் ஈடுபடலாமா, கூடாதா என்பது அந்தந்த நாட்டு அரசாங்கங்களின் முடிவைப் பொறுத்ததே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**UNIVERSITY GRANTS COMMISSION**

Telephone: 695301,695302      18, Ward Place, Colombo 7, Sri Lanka
Date: 9 June, 1991

The Open International University is the only International Institution is Sri Lanka which is not financed by the State, it is outside the jurisdiction of the University Grants Commission but, nevertheless, the teaching which it offers provides a significant contribution to the aims of the Government. From the original faculty of Medicines, which remains the main faculty, the structures have now been extended to include oro-facial sciences, humanistic studies, social sciences and biomedical engineering and allow students from Sri Lanka and foreign countries access to graduate and post-graduate levels of The Open International University and to obtain professional qualifications in these subjects. Therefore, in accordance with the wide-reaching educational policy of Sri Lanka, The Open International University holds graduate and post-graduate courses and issues graduate and post-graduate degrees.

Yours faithfully,

**Prof. A.P.R Aluwihare**
Chairman

இலங்கை U.G.C. அறிவிப்பு



THE OPEN INTERNATIONAL UNIVERSITY
FOR
COMPLEMENTARY MEDICINES

CHARTER OF MEDICINA ALTERNATIVA
(ALMA ATA DECLARATION 1962)

Reply to:
28, International Buddhist
Centre Road
Colombo 6, Sri Lanka

Please correspond by e-mail to ensure speedy reply.
e-mails : medalta@lanka.ccom.lk
medalta@eureka.lk

Ref. No. MA/12/05
Date. 05.12.2005

Dear Sir,
The following amendments were included in the code of Ethics. This is for your kind information.

1. The university has the rights to cancel or removel of the name of the student if he is punished by a court of law anywhere in the world.

2. The OIUCM issue the certificates only after the examination in the respective system and students are advised to keep the manuscripts with the degree certificates.

3. The OUICM issue the certificate only for the qualification. To use the prefix of 'Dr' and practice depends upon the rules and regulations and norms approved by the authorities of the respective govt. in the Countries, where they practice.

4. The senate members or the authorities of the OIUCM will not take any responsibilities for any legal problem in the practice of the student.

OIUCM- இன் கடிதம்

OIUCM இன் உண்மைகள் தெரிய ஆரம்பித்த பிறகு இத்தாலியப் பல்கலைக் கழகம், செபோர்கா பல்கலைக் கழகம், நியூ ஏஜ் உலகப் பல்கலைக்கழகம்... போன்ற பெயர்களில் பட்டங்கள் உலா வர ஆரம்பித்திருக்கின்றன. இது ஒவ்வொன்றையும் இதே அடிப்படையில் பிரித்தறிய முடியும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு நிறுவனமும் பல்கலைக்கழகம் அல்ல; அது வெளிநாட்டு கல்வி நிறுவன அந்தஸ்துடன் நம் நாட்டிற்குள் நுழையவும் இல்லை. உதாரணத்திற்கு நியூ ஏஜ் உலகப் பல்கலைக்கழகத்திற்கு என்று ஒரு இணையதளம் ஒன்று இருக்கிறது. இந்த இணையதளம் எங்கிருந்து இயக்கப்படுகிறது என்று பரிசோதித்தால் அது கல்கத்தாவிலிருந்து இயங்குகிற உண்மை

புரிகிறது. இப்பல்கலைக் கழகம் அமைந்திருப்பதாக கூறப்படும் இத்தாலியின் செபோர்காவில் இப்படி ஒரு நிறுவனமே இல்லை என்று சத்தியம் செய்கிறது செபோர்கா டைம்ஸ் என்ற அந்நாட்டுப் பத்திரிக்கை.



செபோர்கா உலகப்பல்கலைக்கழகத்தின் தோற்றம்




இப்போது இது மாதிரியான கல்வி நிறுவனங்கள் அக்குபங்சரை விட்டு படிப்படியாக விலகிச் செல்கின்றன. அவற்றுடைய புதிய உத்தி நம் நாட்டு பெரிய மனிதர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்குவதும், அதற்காக ஒரு பெருந்தொகையை வாங்கிக்கொள்வதுமாக மாறியிருக்கிறது. யார் எப்படி ஏமாந்தாலும், ஒரு வழியாக மாற்று மருத்துவங்களை விட்டு இந்நிறுவனங்கள் தொலைந்தால் சரிதான்.

அடுத்ததாக இந்தியாவின் மாற்று மருத்துவக் கல்வி நிறுவனங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

# 8

# கல்கத்தாவின் போலிப் பல்கலைக்கழகம்

நம் நாட்டில் இயங்கும் மாற்று மருத்துவக் கல்வி நிறுவனங்களில் மிகவும் பிரபலமான கல்கத்தாவில் இயங்கும் Indian Board of Alternative Medicines (IBAM) என்ற ஒன்றைப்பற்றி நாம் அறிந்து கொண்டால் போதுமானது. அதுதான் பல்வேறு இந்திய நிறுவனங்களுக்கான மாதிரி நிறுவனமாகும். இந்நிறுவனம் நாம் ஏற்கனவே பார்த்த இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு இயங்குகிறது (?).

கல்கத்தா உயர்நீதி மன்றம் 1990 களில் வழங்கிய தீர்ப்பிற்குப் பின்பு தோன்றியதுதான் IBAM. 1996 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மீது தொடரப்பட்ட வழக்கில் ஒவ்வொரு பயிற்சிக்கும் முறையான கல்வித்தகுதியை நிர்ணயித்துக் கொள்ளுமாறு நீதிமன்றம் வழிகாட்டியது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு பயிற்சிக்கும் தான் விரும்பியவாறு ஒரு கல்வித்தகுதியை IBAM நிர்ணயம் செய்துகொண்டது. இந்தக் கல்வித்தகுதி பற்றி அறிய வேண்டுமானால் ஒரே ஒரு உதாரணத்தைப் பார்த்தால் போதுமானது. ஒருவர் IBAM இல் டாக்டர் பட்டம் PhD / D.sc பெற வேண்டுமானால் அவர் பள்ளிக்கே சென்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பிட்ட அந்தத்துறையில் 10 ஆண்டுகள்

RangaRakes tamilnavarasam.com

அனுபவச் சான்றிதழை அளித்தால் போதும். இவ்வாறு தன் இஷ்டத்திற்கு தகுதி என்ற பெயரில் ஒன்றை நிர்ணயித்துக் கொண்டது. சுமார். 20,000 பேருக்கு சான்றிதழ் வழங்கிய IBAM அமைந்திருக்கும் இடம் என்பது ஒரு சிறிய மேல் மாடிதான். (இலங்கைப்பல்கலைக்கழகத்தை விட பெரிய இடம்தான்)

சான்றிதழ், பட்டயம், பட்டம், பட்டமேற்படிப்பு, ஆய்வுபடிப்புக்கள் ( Certificate, Diploma, Degree, P.G.Degree, Doctorates) போன்ற சான்றிதழ்களை முப்பதுக்கும் மேற்பட்ட மாற்று மருத்துவத் துறைகளில் வழங்கி வந்தது. அரசால் அமைக்கப்பட்ட கவுன்சில் தரும் பதிவுச் சான்றிதழான Registered Medical Practitioner – RMP) "பதிவு பெற்ற மருத்துவர்"சான்றிதழை IBAM வழங்கிவருகிறது. IBAM தரும் RMP சான்றிதழின் விரிவாக்கம் என்ன தெரியுமா? Registered Medical Practitioner of the Register of IBAM என்பதாகும். அதாவது RMP சான்றிதழுள்ள நபர் அரசு பதிவு பெற்ற நபரல்ல, இந்நிறுவனத்தின் பதிவேட்டில் பதிவு செய்து கொண்ட நபராம்.

1998 ஆம் ஆண்டில் டெல்லி உயர்நீதிமன்றம் மாற்று மருத்துவக் கல்வி நிறுவனங்கள் சான்றிதழ் / பட்டயம் (Certificate & Diploma) தவிர பிற பட்டங்களை வழங்கக்கூடாது என்று உத்தரவிட்டது. ஆனால் அதற்குப் பிறகும் IBAM எல்லா வகையான பட்டங்களையும் ( MBBS (EH), BASM, BNYT, MD(AM), PhD(AM), Dsc(AM) ) வழங்கி வந்தது. IBAM 1998 ஆம் ஆண்டிற்குப்பிறகு வழங்கிய சான்றிதழ்களில் யாரும் அறியா வண்ணம் ஒரு சின்ன திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எந்த ஒரு பல்கலைக்கழகம் வழங்கும் பட்டமானாலும் அதில் Degree என்ற வார்த்தை இடம்பெற்றிருக்கும். உதாரணமாக பி.ஏ என்ற இளங்கலைப் பட்டம் என்றால் Degree of Bachelor of Arts என்ற வார்த்தைகள் அச்சான்றிதழில் இடம்பெறும். IBAM வழங்கிய பட்டச்சான்றிதழ்களில் Degree என்ற வார்த்தைக்குப் பதிலாக Certificate என்ற வார்த்தை இடம்பெற்றிருந்தது. அதாவது Degree of Bachelor of Arts என்பதற்குப் பதிலாக Certificate of Bachelor of Arts என்று தருவது. IBAM வழங்குவது பட்டங்கள் அல்ல; பட்டங்கள் போன்று தோற்றமளிக்கும் சான்றிதழ் படிப்புதான். நீதிமன்ற உத்தரவையும் அமுல்படுத்தியாகி விட்டது, அதே நேரம் தாங்கள் வழங்கி வந்த பட்டங்களின் பெயர்களையும் மாற்ற வேண்டியதில்லை. இப்படி MBBS (EH), BASM, BNYT, MD(AM), PhD(AM), Dsc(AM) எல்லா பட்டங்களும் ஆங்கில மருத்துவத்தின் பட்டங்கள் போன்று தோற்றமளிக்கும் சாதாரண சான்றிதழ் பயிற்சிகள்.

2004 ஆம் ஆண்டு வெளிவந்த கல்கத்தா உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பில் IBAM மீது நீதிமன்ற அவமதிப்பு மற்றும் ஏமாற்றுதல், போலி ஆவணம் தயாரித்தல் போன்றவைகள் நிரூபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தீர்ப்பு குறிப்பிடும் சில IBAM மோசடிகள்:

1. கல்கத்தா உயர்நீதிமன்றம் IBAM அமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கிவிட்டது போன்ற வாசகங்களை தங்கள் விபரப்புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது.
2. மாவட்ட நீதிமன்றத்தின் 5 ஆம் துணை நீதிபதியின் கையெழுத்தையும், முத்திரையையும் போலியாகத் தயாரித்து பயன்படுத்தியது.
3. கல்கத்தா உயர்நீதி மன்ற நீதிபதிகளில் ஒருவர் IBAM நடத்திய விழாவில் பங்கேற்றது போன்ற போலி புகைப்படத்தை வெளியிட்டது.

...இப்படி அடுக்கடுக்கான மோசடிகளைத் தொடரும் IBAM இன்னும் சான்றிதழ்கள் வழங்குவதை நிறுத்தவில்லை. The Open International University for Alternative Medicines என்ற பெயரில் வெளிநாட்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவருகிறது. 2010 ஆம் ஆண்டு நம் நாட்டு போலி பல்கலைக்கழகங்கள் பட்டியலில் IBAM இன் துணை நிறுவனமான Indian Institute of Alternative Medicines (IIAM) இடம் பெற்றுள்ளது.

IBAM நிறுவனத்தைப் போன்று வெவ்வேறு பெயர்களில் இந்தியா முழுவதும் பல அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. Indian Council of Alternative Medicines, Alternative Medical council, Foundation for Alternative Medicines, University for Electro Homoeopathy, COPAMS, IBAAM, IBIM, OUCH, IBEH, AMCC, IBER என்று எல்லா அமைப்புக்களும் சான்றிதழ்களை விற்பதையே தங்கள் லட்சியமாகக் கொண்டுள்ளன. மாற்று மருத்துவங்களின் மீது மக்கள் நம்பிக்கை பெருகி வரும் இக்காலத்தில் இது போன்ற நிறுவனங்களை நாம் அடையாளம் கண்டு விழிப்புணர்வடைவது அவசியமாகும்.



# ௯

# பாராளுமன்றத்தில் அக்குபங்சர்

அக்குபங்சர் குறித்து இந்தியப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய விபரங்களை நாம் பார்க்கலாம். 2000 ஆம் ஆண்டு தொடங்கிய அக்குபங்சர் பற்றிய கேள்விகள் நம் பாராளுமன்ற மேலவை மற்றும் மக்களவைகளில் பல முறை விவாதிக்கப்பட்டுள்ளன.

அக்குபங்சர் அங்கீகாரம் குறித்த கேள்வி (எண்:752) 29.02.2000 அன்றும், நிபுணர்கள் ஆய்வுக்குழு அமைப்பு பற்றிய கேள்வி (எண்: 5600) 29.08.2001 அன்றும் எழுப்பப்பட்டதையும் அவற்றுக்கான பதில்களையும் முன்பக்கங்களில் நாம் பார்த்தோம்.

இன்னும் சில பாராளுமன்ற விவாதங்களையும் இங்கே பார்க்கலாம்.

கேள்வி எண்: 524

தேதி : 21.11.2001

கேள்வி கேட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்:

திரு. தாராசந்த் பகோரா,
திரு. ராமேஷ்வர் டுடி,
திரு. கஜேந்திர சிங் ரஜூகேதி
திரு. பெரு லால் மீனா
திரு. சரண் தாஸ் மஹந்த்

**கேள்விகள்**

அ. குணமாக்க முடியாது என்று கைவிடப்பட்ட நோயாளிகளும் அக்குபங்சர் சிகிச்சையில் குணமாகிறார்களா?

ஆ. இது உண்மையானால், காது, கண், கல்லீரல் நோய்களில் அதன் பலன் எவ்வாறு இருக்கிறது?

**பதில்கள்**

பதிலளித்த அமைச்சர் : டாக்டர்.சி.பி. தாக்கூர்

அ. அக்குபங்சர் சிகிச்சை பல முக்கியமான நோய்களில் நல்ல பலனளிப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் (ICMR) தெரிவித்துள்ளது. நுரையீரல் தொடர்பான நோய்கள், செரிமானம், வயிறு தொடர்பான நோய்கள், நரம்பு, தசை, எலும்பு தொடர்பான நோய்கள் போன்றவற்றில் நல்ல மாற்றங்களைத் தரும் மரபுவழி மருத்துவமாக அக்குபங்சர் விளங்குவதாக உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) கூறுகிறது.

ஆ. கண், காது மற்றும் கல்லீரல் நோய்கள் உட்பட பல நோய்களில் அக்குபங்சர் நல்ல பயன்களைத் தருகிறது.

கேள்வி எண்: 1098

தேதி : 23.07.2004

கேள்வி கேட்ட பாராளுமன்ற உறுப்பினர்:

திரு. நந்தி எல்லையா

**கேள்விகள்**

அ. யோகா பயிற்சி பெற்ற நபர்கள் அக்குபங்சர் பயிற்சி முடித்து “டாக்டர்” என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் அக்குபங்சரைப் பின்பற்றலாமா?

ஆ. முடியாது என்றால், ஏன்?

இ. அக்குபங்சர் பயிற்சியளிக்க இந்தியாவில் அங்கீகாரம் பெற்ற கல்விநிறுவனங்களின் பட்டியலைத் தரமுடியுமா?

**பதில்கள்**

பதிலளித்த அமைச்சர் : திருமதி. பனபக லட்சுமி

அ , ஆ. அரசு பதிவு பெற்ற மருத்துவர்களோ அல்லது முறையாக பயிற்சி பெற்ற நபர்களோ அக்குபங்சரில் சிகிச்சையளிக்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

இ. அக்குபங்சர் முழுமையான மருத்துவமுறையாக மத்திய அரசால் அங்கீகரிக்கப் படாததால் அப்பயிற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் குழு அமைக்கப்படவில்லை. எனவே கல்விநிறுவனங்கள் பட்டியல் பற்றிய கேள்வி எழவில்லை.

கேள்வி எண்: 1887

தேதி : 20.08.2004

கேள்வி கேட்ட பாராளுமன்ற உறுப்பினர்:

திரு. விஜய் ஜவஹர்லால் தர்தா

RangaRakes tamilnavarasam.com

**கேள்விகள்**

அ. மரபு வழி மருத்துவங்கள் (அக்குபங்சர், மூலிகை மருத்துவம் போன்ற) பற்றிய உலக சுகாதார நிறுவனத்தின் புதிய பரிந்துரைகள் உள்ளனவா? இவ்வகை மருத்துவங்களை தேசிய மக்கள் நலனுக்காக பயன்படுத்தும் போது எவ்விதமான நன்மைகள், பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன?

ஆ. பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் இம்மருத்துவங்களை மாவட்ட அளவில் பயன்படுத்தும் பரிந்துரைகள் அரசிடம் உண்டா?

**பதில்கள்**

பதிலளித்த அமைச்சர் : திருமதி. பனபக லட்சுமி

அ , ஆ. உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation - WHO) 22.06.2004 அன்று மரபுவழி மாற்று மருத்துவங்கள் குறித்த புதிய உதவிக்குறிப்புகளை அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு அளித்துள்ளது. WHO இம்மருத்துவங்களில் அற்புதமான நல்ல பலன்கள் குறைந்த முயற்சியிலேயே கிடைப்பதாகக் கூறுகிறது. நம் நாட்டில் டெல்லி உயர்நீதிமன்றத்தின் 18.11.1998 (CWP 4015/96 and OA No.8468/97) ஆணையின் படி மத்திய அரசு நிபுணர் ஆய்வுக்குழு ஒன்றை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் தலைமையில் அமைத்தது. இக்குழு பல்வேறு மாற்று மருத்துவங்களை ஆய்வுசெய்து, ஒரு பரிந்துரையை அளித்தது. அதில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு கவுன்சில் அமைக்கப்பட்ட மருத்துவங்களான சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகா போன்றவைகள் தவிர புதிய முறைகள் எதுவும் முழுமையான மருத்துவமுறையாக அங்கீகரிக்கப்படவில்லை. இக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, ஏற்றுக்கொண்ட மத்திய அரசு (No. R.14015/25/96 - U&H (R) (Pt.) நவம்பர் 25, 2003 அன்று ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அதன் அடிப்படையில் அக்குபங்சரும், ஹிப்னாட்டிசமும் சிகிச்சை முறைகளாக (Acupuncture and Hypnotherapy which qualified as modes of therapy) ஏற்றுக்கொள்ளப்பட்டன. அக்குபங்சர் மற்றும் ஹிப்னாட்டிச முறைகளில் ஒரு அரசு பதிவு பெற்ற மருத்துவரோ அல்லது முறையாகப் பயிற்சி பெற்ற நபரோ சிகிச்சையளிக்கலாம்.

அனைத்து மாநில அரசுகளும் மத்திய அரசின் மேற்கண்ட முடிவுகளை மக்களுக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளன.

கேள்வி எண்: 4171

தேதி : 21.12.2005

கேள்வி கேட்ட பாராளுமன்ற உறுப்பினர்:

திருமதி. தகுபதி புரந்தரேஸ்வரி

RangaRakes tamilnavarasam.com

**கேள்விகள்**

*அ. அக்குபங்சரில் பார்வைக்குறைபாட்டிற்காக மாற்று சிகிச்சைமுறை உள்ளதாமே?*

*ஆ. இது உண்மையானால், அதைப் பற்றிய விபரங்களைத் தரமுடியுமா?*

*இ. இப்புதிய சிகிச்சை முறை நம் அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படுகிறதா?*

*ஈ. பயன்படுத்தப்படவில்லையானால், அப்படி பயன்படுத்தாமைக்கான காரணங்களைக்கூற முடியுமா?*

**பதில்கள்**

*பதிலளித்த அமைச்சர் : திருமதி. பனபக லட்சுமி*

*அ,ஆ,இ,ஈ : மேலை நாடுகள் பலவற்றில் அக்குபங்சர் சிகிச்சை தசை தொடர்பான நோய்கள் மற்றும் பார்வைக்குறைபாடுகள், பார்வை பறிபோதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்துவதாக தகவல்கள் இல்லை.*

RangaRakes tamilnavarasam.com

# 10

# கேள்விகளும், பதில்களும்

**1. அக்குபங்சரை சிகிச்சைமுறையாகப் பின்பற்றத் தகுதியானவர்கள் யார், யார்?**

மத்திய அரசு வெளியிட்டுள்ள ஆணையின் படி(No. R.14015/25/96 - U&H (R) (Pt.) அக்குபங்சர் முறையை ஒரு அரசு பதிவு பெற்ற மருத்துவரோ அல்லது முறையாகப் பயிற்சி பெற்ற நபரோ சிகிச்சை முறையாகப் பின்பற்றத் தகுதியானவர்கள். “டாக்டர்” என்ற சொல்லை பயிற்சி பெற்ற நபர் பயன்படுத்தக்கூடாது. அக்குபங்சர் முறையில் பயிற்சி பெற்று அரசு சார்ந்த அல்லது பல்கலைக்கழகச் சான்றிதழ் ஒன்றைப் பெற்ற நபர் முறையாகப் பயிற்சி பெற்ற நபராகக் கருதப்படுவார்.

**2. அக்குபங்சருக்கு என்று இந்தியாவில் அரசு கவுன்சில் எதுவும் உள்ளதா?**

மத்திய அரசின் சார்பாக அக்குபங்சருக்கான எந்த ஒரு அங்கீகாரமுள்ள அமைப்பும் இதுவரை அமைக்கப்படவில்லை. மாநில அரசுகளில் மேற்கு வங்காள அரசு ஏப்ரல் 1997 இல் அக்குபங்சருக்கான கவுன்சில் ( Council of Acupuncture Therapy) ஒன்றை அமைத்துள்ளது. 30.11.2007 வரை இக்கவுன்சில் 408 நபர்களுக்கு அக்குபங்சர் சிகிச்சையாளர் (Acupuncture Therapist) பதிவை வழங்கியுள்ளது.

**3. அக்குபங்சர் சிகிச்சையாளர்களில் யாராவது இதுவரை அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுகிறார்களா?**

மத்திய அரசின் இந்திய விமான சேவையில் ( Air India Medical Unit) ஒரு மாற்று மருத்துவ சிகிச்சை மையம் இயங்கி வந்தது. அதில் அக்குபங்சர் சிகிச்சையாளர் ஒருவர் முதன்முதலில் அரசு பணியேற்றார். அக்குபங்சர், ஆயுர்வேதம் மற்றும் ஹோமியோபதி முறைகள் பின்பற்றப்படும் இம்மையம் நடைமுறை சிக்கல்கள் காரணமாக 2002 இல் மூடப்பட்டது.

மாநில அரசுகளில் முதன் முதலாக மேற்கு வங்கத்தில் 18 மாவட்ட மருத்துவமனைகளிலும், 10 துணை மருத்துவமனைகளிலும் அக்குபங்சர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதில் 2007 ஆம் ஆண்டு கணக்கின் படி 25 அக்குபங்சர் சிகிச்சையாளர்கள் பணியாற்றுகின்றனர்.

RangaRakes tamilnavarasam.com



Registered No. WB/SC-247

# The Calcutta Gazette

*Extraordinary*

Published by Authority

WEDNESDAY, FEBRUARY 28, 1996

PART IV—Bills introduced in the West Bengal Legislative Assembly; Reports of Select Committees presented or to be presented in that Assembly, and Bills published before introduction in that Assembly

GOVERNMENT OF WEST BENGAL

LAW DEPARTMENT

Legislative

NOTIFICATION

No. 422-L.—28th February, 1996.—The Governor having been pleased to order, under rule 66 of the Rules of Procedure and Conduct of Business in the West Bengal Legislative Assembly, the publication of the following Bill, together with the Statement of Objects and Reasons and the Financial Memorandum which accompany it, in the Calcutta Gazette, the Bill, the Statement of Objects and Reasons and the Financial Memorandum are accordingly hereby published for general information.

Bill No. 14 of 1996

THE WEST BENGAL ACUPUNCTURE SYSTEM OF THERAPY BILL, 1996.

A

BILL

*to provide for the development of the Acupuncture system of therapy, to regulate the teaching and practice thereof and to deal with certain other connected matters*

*The Acupuncture is also a system of therapy approved by the Govt. of West Bengal Vide No. 14 of 1996, Dt. 28.2.1996.*

4. தமிழ்நாட்டில் அக்குபங்சர் பற்றிய அரசு குறிப்புக்கள் எதுவும் உள்ளதா?

*தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டு மார்ச் 9 அன்று நடைபெற்ற ஆளுநர் உரையில் அக்குபங்சர் உள்ளிட்ட மாற்று மருத்துவங்களை தனியார் பங்களிப்பு மூலம் ஊக்குவிக்க வேண்டும் என்ற திட்ட முன்வைப்பு இடம்பெற்றது.*

5. தமிழ்நாட்டில் அரசு அக்குபங்சர் கவுன்சில் இயங்குவதாக ஒரு சிலர் கூறுகிறார்களே?

*இந்தியாவிலேயே மேற்கு வங்கத்தில் மட்டும்தான் அரசு அக்குபங்சர் கவுன்சில் துவக்கப்பட்டுள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் அரசு கவுன்சில் துவக்கப்படவில்லை. தமிழகத்தில் சில தனி நபர்கள் தமிழ்நாடு அக்குபங்சர் கவுன்சில் என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அது அரசு கவுன்சில் என்று நம்ப வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஒரு மாநில அரசு கவுன்சில் ஒன்றைத் துவக்குவதாக இருந்தால் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு அல்லது அரசு*




**Governor's Address in the Legislative Assembly on 9th March 2002**

**24. The Government will encourage private sector participation in the development of alternative systems of medicine like Ayurveda, Siddha, Unani, Acupuncture therapy etc. Existing infrastructure for alternative systems of medicine will be strengthened in the districts and new infrastructure will be created wherever they do not exist.**

ஆணை மூலமாகவே பணிகள் துவங்கும். தமிழ்நாட்டில் அக்குபங்சருக்கான சங்கங்கள் இருக்கின்றனவே தவிர அரசு கவுன்சில்கள் எதுவும் இல்லை.

**6. R.I.M.P, R.H.M.P., R.U.M.P, R.A.M.P போன்றவைகள் பட்டங்களா? இந்த படிப்புக்கள் எங்கு நடைபெறுகிறது?**

மேற்கண்டவைகள் படிப்புக்களோ, பட்டங்களோ அல்ல. உதாரணமாக R.H.M.P என்ற பெயர் பதிவு பெற்ற ஹோமியோபதி மருத்துவரைக் குறிக்கிறது. ( Registered Homoeopathic Medical Practitioner). இது ஹோமியோபதிக்கான அரசு கவுன்சில் மூலம் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழாகும். இந்த பதிவுச்சான்றிதழ் பெற்றவர்கள் மட்டும்தான் முறையான ஹோமியோபதி மருத்துவர் ஆவார். சித்த மருத்துவப் பதிவை R.I.M.P என்றும், யுனானி மருத்துவர் பதிவை R.U.M.P என்றும், ஆயுர்வேத மருத்துவர் பதிவை R.A.M.P என்றும் அழைக்கின்றனர். இன்று ஒரு நபர் இவ்வகையான மருத்துவர் பதிவைப் பெற வேண்டுமானால் அவர் அக்குறிப்பிட்ட மருத்துவத்தில் அரசு வழங்கும் பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். உதாரணமாக ஹோமியோபதியில் BHMS என்ற ஐந்தரை வருட பட்டப்படிப்பை முடித்த ஒருவர்தான் ஹோமியோ மருத்துவர் பதிவைப் பெறமுடியும். இவ்வாறே சித்தாவில் BSMS முடித்தவர்கள், ஆயுர்வேதத்தில் BSMS முடித்தவர்கள், யுனானியில் BUMS முடித்தவர்கள் தான் அந்தந்த மருத்துவக் கவுன்சில்களில் மருத்துவர் பதிவைப் பெற முடியும்.

இதே பதிவுச் சான்றிதழ் முன்பு அனுபவ அடிப்படையிலும் வழங்கப்பட்டன. தமிழகத்தில் 1970 களில் மருத்துவத்திற்கான கவுன்சில்கள் அமைக்கப்பட்டபோது ஏற்கனவே மரபு வழியில் அனுபவ மருத்துவர்களாக இருந்தவர்களுக்கு இப்பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. 1980 கள் வரை இரண்டு, மூன்று முறை வழங்கப்பட்ட இப்பதிவுகள் இப்போது தரப்படுவதில்லை. 1999 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சித்த மருத்துவர்கள் 15000 பேரின் பதிவுகளை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த வழக்கும் இப்போது நிலுவையில்

உள்ளது. மேற்கண்ட பதிவுச் சான்றிதழ்களை தனியார் அமைப்புக்கள் சிலவும் வழங்கி வருகின்றன. இவைகள் அரசு கவுன்சில்களால் வழங்கப்பட்டால் தவிர சட்டப்படி செல்லாதவை தான்.

**7. அரசு கவுன்சில்களின் பதிவுகள் பீஹார், நாகலாந்து (யூனியன் பிரதேசம்) போன்ற மாநிலங்களில் இப்போதும் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறதே?**

அந்தந்த மாநிலங்களின் கல்வி, மருத்துவ நிலைகளைப் பொறுத்து பின் தங்கிய சில மாநிலங்களில் தரப்படுகிறது. பொதுவாக ஒரு மாநில அரசு தரும் மருத்துவர் பதிவுகள் என்பவை அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் வசிக்கும் நபர்களுக்கானவை. ஒரு மாநில அரசின் பதிவைப்பெற்ற நபர் இன்னொரு மாநிலத்தில் மருத்துவராக இருக்கத் தடையில்லை என்றாலும் அதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக, தமிழகத்தில் உள்ள சில நபர்கள் பீஹார், நாகலாந்து போன்ற இடங்களில் இருந்து மருத்துவர் பதிவைப் பெற்று வருகின்றனர். இப்படியான மருத்துவர் பதிவைப் பெற குறிப்பிட்ட மாநிலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்ததற்கான இருப்பிடச் சான்றும், அங்கு குறிப்பிட்ட மருத்துவத்தை பின்பற்றியதற்கான அனுபவச்சான்றிதழும் அம்மாநில அரசிற்கு பதிவு கோரும் விண்ணப் பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பீகாரையோ, நாகலாந்தையோ முன் பின் பார்த்திராத நம் தமிழகத்து நபர்கள் இச்சான்றிதழ்களை எங்கிருந்து தருவார்கள்? பதிவுச்சான்றிதழ் பெற்றுத்தருவதாகக் கூறும் சில நபர்கள் அரசிற்கு அளிக்க வேண்டிய சான்றுகளை போலியாகத் தாங்களே தயாரித்து சமர்ப்பிக்கிறார்கள். யாரோ ஒரு சிலர் இவ்வகையில் பிற மாநிலப் பதிவுகளைப் பெற்றிருந்தால் பெரிய விஷயமாகத் தெரியாது. தமிழகத்தில் மட்டும் ஆயிரக்கணக்கானோர் இத்தகைய பிற மாநிலப் பதிவுகளைப் பெற்று மருத்துவர்களாக உள்ளனர். அதுவும் இவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் பெரும்பாலும் ஒரே தேதியில் வழங்கப்பட்டவைகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட தேதியில் ஆயிரக் கணக்கானோருக்கு ஒரு அரசுத் துறை பதிவுச்சான்றிதழ் வழங்குவது சாத்தியமா? இவ்வாறு வழங்கப்படும் சான்றிதழ்களில் எது அரசால் வழங்கப்பட்டது? எது போலியாக அச்சடிக்கப்பட்டது? என்பதைக் கண்டுபிடிக்க எந்த வழிமுறையும் இல்லை.

**8. ஹோமியோபதியில் டிப்ளமோ, சித்த மருத்துவத்தில் டிப்ளமோ, ஆயுர்வேதத்தில் டிப்ளமோ போன்ற பயிற்சிகள் தற்போது அதிகரித்துள்ளனவே? இச் சான்றிதழ்கள் பெற்றவர்கள் மருத்துவர்களாக பணியாற்ற முடியுமா?**

குறிப்பிட்ட கவுன்சில்களின் அங்கீகாரம் பெறாமல்தான் இத்தகைய பயிற்சிகளை பல நிறுவனங்கள் துவங்கியுள்ளன. இச்சான்றிதழ்களைப் பெற்று முறையான மருத்துவராகப் பணியாற்ற சட்டப்படி எந்தத் தகுதியும் இல்லை. குறிப்பிட்ட மருத்துவங்களின் கவுன்சில்கள் ஒருவேளை எதிர்காலத்தில் இப்பயிற்சிகளை அங்கீகரித்தாலும் கூட,

RangaRakes tamilnavarasam.com

பயிற்சி முடித்தவர்கள் மருத்துவர்களின் உதவியாளர்களாக மட்டுமே பணியாற்ற முடியும்.

**9. ஹோமியோபதி – அக்குபங்சர், மூலிகை மருத்துவம் – ஹோமியோபதி, சித்த மருத்துவம் – யோகா, இயற்கை மருத்துவம் – அக்குபங்சர் என்ற கலப்புப் பயிற்சிகள் பற்றி?**

அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமுறைகளின் பயிற்சிகளையும், அங்கீகரிக்கப்படாத மாற்று மருத்துவங்களின் பயிற்சிகளையும் கலந்த கல்வியை அளிப்பது சர்ச்சைக்குரிய விஷயம்தான். ஏனெனில் கவுன்சில்கள் அமைக்கப்பட்ட மருத்துவ முறைகளின் பெயர்களை எந்தப் பயிற்சியில் பயன்படுத்தினாலும் அக்கவுன்சிலின் அனுமதி பெற வேண்டும். (அவ்வாறு அனுமதியளிக்கப்படாது). மூலிகை மருத்துவம் என்பது சித்த, ஆயுர்வேத மருத்துவங்களின் ஒரு பகுதி. அதே போல மசாஜ், பஞ்சகர்மா, வர்மா என்பவை ஆயுர்வேத மருத்துவத்தின் ஒரு பகுதி. கவுன்சில் அனுமதியைத் தவிர்ப்பதற்காக மருத்துவத்தின் சில பிரிவுகளை தனித்தனிப் பயிற்சிகளாக கல்வி நிறுவனங்கள் நடத்திவருகின்றன. ஒரு வேளை அரசால் இப்பயிற்சிகள் எதிர்காலத்தில் அங்கீகரிக்கப் பட்டாலும் கூட சுய வேலைவாய்ப்புப் பயிற்சியாகவும், மருத்துவ உதவியாளர் பயிற்சியாகவுமே அங்கீகரிக்கப்படலாமே தவிர மருத்துவருக்கான பயிற்சியாக எப்போதும் அங்கீகரிக்கும் வாய்ப்பு இல்லை.

**10. போலி மருத்துவர் என்றால் யார்?**

நம்முடைய பத்திரிகைகள் அவ்வப்போது “போலி மருத்துவர் கைது” என்று வெளியிடும் செய்தி கூறும் போலி மருத்துவர் என்பது அவ்வப்போது செய்தி கொடுப்பவர்களைப் பொறுத்து மாறும். ஆனால் சட்டப்படி போலி மருத்துவர் என்பதற்கான வரையறைகள் உள்ளன.

1. ஒரு நபர் எந்த மருத்துவமும் படிக்காமல் (முறையான சான்றிதழ் இல்லாமல்), பிறருக்கு ஏதாவதொரு மருத்துவ முறையில் சிகிச்சையளித்தால் அந்நபர் போலி மருத்துவராகக் கருதப்படுவார்.
2. ஒரு மருத்துவமுறையில் படித்து சான்று பெற்ற மருத்துவர், தான் பயிற்சி பெறாத இன்னொரு மருத்துவ முறையின் அடிப்படையில் சிகிச்சையளித்தாலும் அந்நபர் போலி மருத்துவராகக் கருதப்படுவார்.

   அக்குபங்சர், ஹிப்னோதெரபி போன்ற முறைகளில் மருந்துகளைப் பயன்படுத்தாத நபர்கள் அரசின் பார்வையில் சிகிச்சையாளர்கள் தான். மருத்துவர்களே அல்ல: போலி மருத்துவர் விஷயத்தில் முறையான அக்குபங்சர் மற்றும் ஹிப்னோதெரபி சிகிச்சையாளர் களுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை.

**11. தமிழகத்தில் அக்குபங்சர் பயிற்சியை வழங்கிவரும் நிறுவனங்கள் எவை?**

1. தமிழக அரசில் சங்கப்பதிவு அல்லது அறக்கட்டளைப் பதிவு பெற்ற அமைப்புக்கள் அக்குபங்சர் பயிற்சியளித்து தங்களுடைய தனி சான்றிதழ்களை வழங்குகின்றன.
2. மத்திய அரசின் நிதிஉதவியோடு இயங்கும் ஜெ.எஸ்.எஸ் (மக்கள் கல்வி நிறுவனம்) அமைப்பும், மத்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் துவங்கப்பட்டு இயங்கிவரும் பி.எஸ்.எஸ் சுயாட்சி அமைப்பும் அரசு சார்ந்த பயிற்சி மையங்களாக இயங்கிவருகின்றன.
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆறு மாத சான்றிதழ் பயிற்சியையும், விநாயகா மிஷன் பல்கலைக்கழகம் ஒரு வருட டிப்ளமோ பயிற்சியையும், இந்திராகாந்தி திறந்தநிலைப்பல்கலைக்கழகம் சான்றிதழ், டிப்ளமோ பயிற்சிகளையும் பனிரெண்டாம் வகுப்பு கல்வித்தகுதியில் நடத்திவருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முதுகலை டிப்ளமோ பயிற்சியை மருத்துவப் பட்டம் பெற்றவர்களுக்கு நடத்திவருகிறது.

தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் ஆகியவை விரைவில் அக்குபங்சர் பயிற்சிகளைத் துவங்கவுள்ளன.

# மருத்துவப் பயிற்சிகள் தொடர்பான எந்த ஒரு சந்தேகமாக இருந்தாலும் மாநில அரசின் சுகாதாரத் துறைக்கோ, மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கோ தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்விகளை அனுப்பி முறையான பதில்களைப் பெறலாம்.

# பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் பற்றிய கேள்விகள் எழுந்தால் பல்கலைக்கழக மானியக்குழுவின் (யு.ஜி.சி) இணையத்தளத்தில் (www.ugc.ac.in) சரிபார்த்துக் கொள்ளலாம்.

இந்நூல் ஆசிரியருடன் கலந்துரையாட....

Healer. அ.உமர் பாரூக்
94880 11505, 89036 89063
drumarfarook@gmail.com | www.acuhome.org

RangaRakes tamilnavarasam.com